www.tamilarangam.net

ஞ்சீவி
மலர் 21



Chanchive 21-Udgave

# சஞ்சீவி

மலர் - 21



RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE : FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# சஞ்சீவி

மலர் - 21

ஒக்ரோபர் - டிஷம்பர் 1992


<<அட்டைப்படவிளக்கம்>>

" 'சே' எங்கள் மத்தியில் எப்போதும் வாழ்வார் "


| பக்கம் | உள்ளடக்கம் |
|---|---|
| 03 | சேகுவாரா நினைவாக |
| 05 | கவிதை |
| 07 | சிறுகதை |
| 15 | கவிதை |
| 17 | கவிதை |
| 18 | கட்டுரை |
| 24 | படித்ததும் கேட்டதும் |
| 25 | சதுரங்கம் |
| 28 | குறுக்கெழுத்துப்போட்டி |
| 31 | அஞ்சல் நூலகம் |
| 33 | கவிதை |
| 34 | கம்யூனிசத்திற்கு சாவு மணி அடிக்கப்பட்டு விட்டதா? |
| 39 | கவிதை |
| 40 | கடிதங்கள் |
| 45 | சேந்தன் எங்கே ? |
| 48 | கட்டுரை |
| 51 | கட்டுரை |



சஞ்சீவியின் தொடர்புகளுக்கு: Chanchive
Danmarksgade 10
7500-Holstebro.D.K

www.tamilarangam.net

# சேகுவாரா நினைவாக......

இம்மாதம் (அக்டோபர் ) 8ம்திகதி லத்தீன் அமெரிக்கப்புரட்சியாளர் சேகுவேரா இறந்து 25 வருடம் பூர்த்தியாகின்றது(அவரின் முழுப்பெயர் Ernesto Checuevara)

சேகுவாராவின் பொது வாழ்க்கை பலநாடுகளைச்சுற்றிப்பார்ப்பதிலிருந்து ஆரம்பித்து.அதனூடாக அவர் மக்களுக்கு எதிரான அநீதிகளைக்கண்டார்.அதற்க்கு விடிவுகாணவேண்டும் என்ற ஆவல் இறுதியில் அவர் உயிருக்கே ஆபத்தாகிப்போனது.

"ஐக்கியப்பட்ட லத்தீன் அமெரிக்க"க்கனவு அவரின் டாக்டர் படிப்பு (1953) முடிந்து மோட்டார்சைக்கிள் சுற்றுலா ஒன்றை ஆர்ஜன்டினா ஊடாக லத்தீன் அமரிக்கா முழுவதும் செய்தபோது பரிணமித்தது.மெக்சிக்கோவில் அவர் கியூபாவைச்சேர்ந்த ஒரு குழுவைச்சந்திக்கநேர்ந்தது.அங்குதான் பிடல்கஸ்ரோவையும் சந்தித்தார்.

கியூபாவில் ஓர் புரட்சியை நடாத்தத்திட்டமிட்ட அக்குழுவினருடன் தன்னையும் இணைத்துக்கொள்ள அவரது டாக்டர் படிப்பும் உதவியது. பிற்காலத்தில் மிகவும் திறமையான ராணுவ அமைப்பாளராகத் திகழ்ந்தார்.அவர் தலைமைதாங்கிய குழு இறுதியில்(1959) கியூபாவின் சர்வாதிகாரியும்,அமெரிக்க அடிவருடியுமான பாடிஸ்டாவின் ஆட்சியை ஒழித்துக்கட்டியது.

லத்தீன்அமெரிக்காவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போர்க்கொடியை உயர்த்தினார் சே.கியூபாப் புரட்சி அதற்கான முதல் பணியை ஆரம்பித்துவைத்தது. வெற்றிபெற்ற கியூபா அரசில் சே தேசியவங்கியின் தலைவராகவும்,பின் ஸ்கைத்தொழில் அமைச்சராகவும் இருந்தார்.வெளிநாடுகளில் கியூபாவின் பிரதிநிதியாகவும் இரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ந்து ஆபிரிக்க நாடுகளுக்கும் விஜயம் செய்தார்.

ஐக்கியலத்தின் அமெரிக்கச் சிந்தனை அவரிடம் அதிகமாக இருந்த காரணத்தினால் ,கியூபா புரட்சி வெற்றியின் நம்பிக்கையும்,அதே பாணியினாலான புரட்சி சாத்தியம் என்ற நம்பிக்கையும் அவரை கியூபாவைவிட்டு பொலிவியாவுக்கு செல்லவைத்தது.சே எப்போதும் தனது தாய்நாடான ஆர்ஜன்டீனாவை நேசித்த காரணத்தினால் அங்கேயும் கியூபா பாணியிலான புரட்சியை ஆரம்பிக்கவேண்டும் என்ற ஆவல் அந்நாட்டு கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவால் ஏற்பட்டது.ஆனால் கட்சியின் உள்முரண்பாடுகளால் சே எதிர்பார்த்த உதவிகள் கிட்டவில்லை.

சே தனது போராட்டத்தை பொலிவியாவில் ஆரம்பித்தார்.அங்குதான் அமெரிக்க உளவுப்படையால்(CIA)படுகொலை செய்யப்பட்டார்.(8.10.67)சேயின் அமரிக்க ஏகாதிபத்தியஎதிர்ப்பு அமரிக்கஏகாதிபத்தியவாதிகளை பயமுறுத்தியது. சேயை படுகொலை செய்வதன் மூலம் அவரையும்,அமரிக்கஎதிர்ப்பையும் மழுங்கடிக்கலாம் என அமரிக்கா எண்ணியது. குண்டு துளைத்து காயப்பட்ட சேயை,பொலிவியா அரசு படமெடுத்துக்காட்டி அமரிக்காவிடம் நன்மதிப்பைப்பெற்றது.

ஆனால் அதற்கு மாறாக சே ஒடுக்கப்பட்ட மக்களினதும் ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களினதும் ,நீதிக்காக உயிர்கொடுக்கக்கூடிய மக்களினதும் சின்னமாகிவிட்டார். சே ஓர் சர்வதேசவாதியும் சோசலிசப் போராளியுமாவார்.

இம்மாதம் கொலம்பஸ் எனும் ஏகாதிபத்தியவாதியின் 500 வது வருட நினைவை ஒட்டி ஏகாத்தியங்கள் விழா (12.10.92) கொண்டாடினர்.ஆனால் பொதுமக்கள் அதற்கு எதிராக திரண்டு போராடினர்.இவ்வேளையில் ஓர் ஏகாதிபத்திய எதிர்ப்பாளனை நினைவு கூர்வது மூன்றாம் உலகநாட்டு மக்களினதும்,ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களினதும் தலையாய கடமையாகும்.அமரிக்க ஏகாதிபத்தியத்தை இறுதிவரை எதிர்த்தவர்,பயபீதிக்குள்ளாக்கியவர்,தனது இறுதிக்காலம்வரை மக்களை நேசித்த தியாகிதான் சே. அவர் இன்று மறைந்து 25 வருடமானாலும்,கியூபாமக்கள் கூறுவதுபோல »*சே எங்கள் மத்தியில் எப்போதும் வாழ்வார்*«

■ சஞ்சீவி■

சஞ்சீவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உன்னிடம் இருப்பதெல்லாம் பசி மட்டுமே...

- சேகுவாரா -

அவ்வளவுதான் மாரியா,அன்பு முதாட்டியே!
உன் வாழ்வு இடைவிடாத
மெலிவுற்ற துன்பங்களை கொண்டிருந்தது.
நீ நேசித்த ஒரு மனிதனில்லாமல்
ஆரோக்கியமும் சந்தோசமுமில்லாமல்
பகிர்ந்துகொள்வதற்கு
உன்னிடமிருந்ததெல்லாம் பசிமட்டுமே.

உன்வாழ்வு துயரமானது
மாரியா,அன்பு முதாட்டியே!
நிலையான ஓய்வின் சமீபம்
உன் கண்மணிகளின் வலியை மூடும்போது
ஓய்வில்லாமல் துடைத்துக் கழுவிய
உன் கைகள்
கபடமற்ற வருடலைக் கடைசியாக
உணரும்போது
நீ அவர்களை நினைப்பாய்,
புலம்புவாய்.

பரிதாபமான மரியா, என் அன்பு
முதாட்டியே,
வேண்டாம்
அதைச் செய்யவே செய்யாதே!
உன் வாழ்நாள் முழுவதும்
உன் நம்பிக்கைக்குப் பொய்யுரைத்த
அந்தச் சோம்பேறிக் கடவுளை
வழிபடாதே.
சாவின் கருணையை நீ வேண்டாதே.



சஞ்சீவி

www.tamilarangam.net

"சுமதி வருகிறாள்.இன்று என் சுமதி வருகிறாள்" பரந்தாமனின் இதயம் ஆனந்தத்தாண்டவமாடியது.பரந்தாமன் இன்று நேரத்திற்கே தூக்கத்தால் எழுந்துவிட்டான். அவன் இரவு பூராவும் தூங்கினானா,இல்லையா என்பது வேறு விடையம். பூரித்துப் போன வானமும் காலையிலிருந்தே பூமியைநோக்கி சோளப்பொரிபோல் வெண் பனிப் பூக்களை அள்ளி இறைத்துக் கொண்டிருந்தது. பூமி தன் மடியில் வந்து தஞ்சம்புகும் பனித்துளிக்கைகளுக்கு அடைகலம் கொடுத்து தனது வெள்ளை மனதை வெளிப்படையாகக் காட்டிக்கொண்டிருந்தது. தாமதமாய் எழுந்த ஆதவனும் தன் பங்கிற்காக தனது நீண்ட கிரண கரங்களை விரித்து பூமிக்கு வெய்யிலை விரித்தான்.காலையிள மஞ்சள் வெயிலில் பனிபடர்ந்த தெருக்கள் பொன்னென மிளிர்ந்தன.அதுவும்,அந்த மெல்லிய வெயிலின்போது பனிகொட்டுவதென்பது எவ்வளவு அற்புதமான காட்சி.தங்கத் தூறல்கள் பூமியில் கொட்டுவது போலல்லவா இருக்கின்றன.

அதிகாலையிலிருந்தே நெஞ்சினுள் ஒருவிதமகிழ்ச்சிப்பதட்டத்துடன் ,பரபரப்பாய் இயங்கிக்கொண்டிருந்தான் பரந்தாமன்.வீட்டைச் சுத்தம்செய்து,இருக்கைகளை பொருத்தமான இடம்தேடி அடிக்கடி மாற்றிவைத்து இறுதியாக முன்பிருந்த அதே இடமே பொருத்தமென்று,அதேஇடத்தில் இருக்கைகளை தூசிதட்டிவைத்தான்.ரீ.வீயை தனது அறையிலிருந்து நகர்த்தி வராண்டாவில் சோபாவில்இருந்துபார்க்கக் கூடியதாக வைத்துவிட்டு , அதன்மேல் அழகியசிறிய பிளாஸ்ரிக் பூச்சாடியென்றையும்,பலகோணங்களில் வைத்துப்பார்த்தான்.கடைசியாக தனக்கெனப்பிடித்துக்கொண்ட ஓர்கோணத்தில் அதனை வைத்துவிட்டு,வீட்டினுள் தினமும் புகைத்த சிகரட் புகையால்மண்டிக்கிடந்த கெட்டநாற்றத்தை மூடிமறைப்பதற்காக வியட்நாம்கடையில் நேற்று வாங்கிய சாம்பிராணிக்குச்சையும் கொழுத்தி வைத்துவிட்டு,குளித்துவிட்டு தன்னை அலங்கரிக்கத் தயாரானான்.ஆங்காங்கே சிலிர்த்து நின்ற முள்ளம்

சஞ்சீவி

www.tamilarangam.net

பன்றித் தாடியை புதியபிளேட்
பொருத்திய றேசரால் மூன்று
தடவைக்குமேல் பதமாய்
சவரம்செய்து விட்டு ,அரும்பு
மீசையில் அடம்பிடித்துநின்ற
சிலமயிர்களையும் சிரம்கொ
ய்து எறிந்தபின்,முகத்திற்கு
நிவியாக் கிறீம் பூசிக்கொண்
டான் .நீண்டநேரமாய் எதை
அணிந்துகொள்வதென்ற
குழப்பத்தில் தன்னிடமிருந்த
எல்லா உடைகளையுமே மடிப்
புக்கலைத்துவெளியே
எடுத்துப்போட்டாயிற்று.சுமதிக்கு
எந்தநிறஉடைபிடிக்கும் என்ற
திராக்குழப்பத்திலிருந்துபரந்தாமன்
மீள்வதற்கு நீண்டநேரம் செல
வழிந்துவிட்டது. முடிவில் குத்
துமதிப்பில் ஓர் காற்சட்டை,சே
ட்டை தெரிவுசெய்து கொண்ட
ான். சுவரில் தொங்கிய கடிகார
த்தை பார்த்தான்.மணி பத்து.
இன்னும் 4 மணித்தியாலத்தி
ல் சுமதி வந்திறங்கிவிடுவாள்.
இன்னும் நான்கே மணித்தியா
லங்கள். ஆனால் முட்கள்
நகர மறுக்கின்றதாய் கடிகாரத்
தை கடிந்துகொண்டான்
தன்னுள்.சுமதியும் பரந்தாம
னும் ஒரே ஊராய் இருந்தும்
இரு வீட்டுக்காரரின் பாரம்பரி
ய பேச்சுவார்த்தை மூலமே
இருவரது திருமணமும்
நிச்சயிக்கப்பட்டது.திருமண
நிச்சயிப்பின் பின்னர்தான்
சில தடவைகள் சுமதி கொழு
சஞ்சீவி
ம்பிற்கு வந்து பரந்தாமனோ-
டு தொலைபேசியில் பேசி
யிருக்கிறாள்.அந்தச் சில
தடவை தொலைபேசி
உரையாடல்களிலேயே
பரந்தாமனும் சுமதியும் ஒரு
வரையொருவர்
கணவன்,மனைவியாய் பிர
கடனம் செய்துகொண்ட
னர். புண்ணியபூமியிலிரு
ந்து சுமதி அனுப்பிவைத்த
கடிதங்கள் பரந்தாமனிடமு
ம்,பனித்தேசத்திலிருந்து
பரந்தாமன் அனுப்பிவைத்த
கடிதங்கள் சுமதியிடமும்
பவுத்திரமாய்ப் பாதுகாக்க
ப்படவேண்டிய பொக்கிஷ
ங்களைப்போல் அவரவர்
பாதுகாப்பில்.

அழைப்புமணி கேட்டு
வாயிற்படிக் கதவைத்
திறந்தான் பரந்தாமன்.லிங்
கநாதன் வாசலில் நின்றிரு
ந்தான் ."என்னடாப்பா
இவ்வளவு நேரமும்
செய்தனி.நேரமெல்லா
போச்சு?" பரந்தாமன் .
"பன்னிரண்டு மணிக்குத்
தானேயடாப்பா வரச்சொ
ன்னனி? உன்ரகுணம்
தெரிஞ்சு பத்துநிமிஷம்
முன்னுக்கே வந்திற்றன்
நீயெண்டால் விசர்க்த
கதைக்கிறாய் .உன்ர
அவசரம்எனக்குவிளங்குது.

www.tamilarangam.net

மச்சான்.அதுக்கு ஒன்றும்செ-சய் யேலாதடாப்பா." லிங்கநாதன் நக்கலாகவே சொன்னான். "இல்லயடாப்பா எனக்கு கையுமோடேல்ல....." அப்பாவித்தனமான அசட்டுக்கோடுகள் முகத்தில் ஊரக் கூறினான் பரந்தாமன்."அதெனக்குத்தெரியுமடாப்பா.ஒரு வருசத்துக்குமேல் பொறுத்திருந்தனி இன்னும் ரெண்டு மணித்தியாலம் பொறுத்துக்கொள்ளேதாடாப்பா? கேலியாக லிங்கநாதன் இப்படிக் கேட்டதும் பரந்தாமனுக்கு வெட்கமாகி விட்டது.

எவரெஸ்ட்டையும் மிஞ்சும்படியான தாயகனவுக்கு-வியலுடன் சுமதி பின்சீட்டில் அமர்ந்திருக்க,பக்கத்தே பரந்தாமன் செயற்கைவெட்கத்தோடு அமர்ந்திருக்க,இளங்கிளிகளை சுமந்தபடி பனித்தெருவால் நகர்வலம் வரும் ரொயோட்டா நான்குசக்கரத்தேரை பவ்வியமாக பனித்தெருவில் சறுக்காதபடி செலுத்திவந்து பரந்தாமனது வீட்டுவாயிற் படியருகே நிறுத்தினான் லிங்கநாதன்.

லிங்கநாதன் இங்கிதம் தெரிந்தவன்.சுமதியும்,பரந்தாமனும் காரைவிட்டு இறங்கியதுமே "மச்சான் இண்டைக்கொராள் வீட்டுக்கு விசிற் வருகுதடாப்பா,அவசரமாய்ப்போறன், பிறகு வந்து சந்திக்கிறன். மனுசி கொண்டுவந்த சிகரட்டில் எனக்கும் எடுத்துவை ,மறந்திராத" பரந்தாமனின் பதிலுக்கு காத்திராமல் காரை ரிவஸ் செய்து போயேவிட்டான், லிங்கநாதன்.

"பயணமெல்லாம் எப்பிடியிருந்துது?" வெட்கம் கலந்தவனாய்சுமதியைநோக்கி தனது கன்னிக்கேள்வியை க் கேட்டுவைத்தான் பரந்தாமன்.ரெலிபோனில் கூச்சநாச்சமில்மல் எவ்வளவோ கதைச்சவர் இப்ப ஏன் வெட்கப்படுகிறாரோ தெரியேல்ல.சும்மா கடமைக்கு ஏதோ கேக்கவேணுமெண்டதுக்காகக கேட்கிறார் என்று தனக்குள் எண்ணிக்கொண்டபடி "ம் பரவாயில்ல.மொஸ்கோ,ட்ரான்ஸிட்டில்தான் கொஞ்சம்கஸ்டப்பட்டுப்போனன்.அவங்கள் கதைக்கிறதும் எனக்கு விளங்கேல்ல. நான்கதைக்கிறஇங்கிலீஷும் அவங்களுக்கு விளங்கேல்ல,பிறகு ஒருமாதிரிச் சமாளிச்சிற்றன்" தனக்கு இங்கிலீஷ் தெரியும் என்பதை தநாசுக்காகவிளங்கவைத்தாள். "சரியாக கஸ்டப்பட்டுப்போனியா என்ர குஞ்சு........?"

சஞ்சீவி

என்பதுபோல் பாவனையை முகத்திற் பரத்தியபடி சுமதி சொல்வதை கேட்டபடியே கதவைத்திறந்தான் பரந்தாமன். சுமதி தான் வாழப்போகும் வீட்டிற்குள் முதன்முதலில் காலடியெடுத்துவைத்தாள்.வீட்டினுள் நுழைந்தவளுக்கு வீட்டுக்கூடத்தின்சுவர்கள் அவளைக் கொடுந்தீயில் சுட்டெரிப்பது போலதெரிய அதிர்ச்சியோடு நிலைத்து நின்றுவிட்டாள் ஓரிடத்திலேயே ."கொலைகாரக்கும்பலின் விசுவாசியிடமா நான் என்னை ஒப்படைக்கத் தேடிவந்தேன்....?இந்தக்கொலைகாரருக்கும் ,இவருக்கும் என்ன சம்பந்தம்? அந்தக்கூட்டத்திற்காக இங்கிருந்து உழைப்பவர்களில் பரந்தாமனும் ஒருவனா?அவசரமாய் பதில் கிடைக்கவேண்டிய கேள்விகள் அவளினுள்ளே எழுந்தவண்ணமிருந்தன.

"என்னசுமதி அப்பிடியே நிண்டிட்டீர் .உள்ளவாருமன்.இதுதான் என்ர வசந்தமாளிகை. உள்ள வாரும்."மலைத்து ,ஓரிடத்தே நிலைத்து நின்ற சுமதியின் சிந்தனையை கலைத்தான் பரந்தாமன்.எப்படியெல்லாமோ வாழப்போகிறோம் என்ற மாபெரும் கற்பனைப் பொதிகளைச்சுமந்து இந்தமண்ணுக்கு வந்தவளுக்கு இப்போது பேரதிர்ச்சியைச் சுமக்கும் நிலை உருவாகிவிட்டதே...? மாவீரம்பொருந்திய வர்ண வர்ணப்படங்களும்,போஸ்டர்களும் சுவரில் இருந்து இவளை எள்ளிநகையாடின.மாயமரணங்களால் நிறைந்த விளம்பரப்படங்கள் "இறுதியில் நீ எங்கே வந்து தஞ்சம் புகுந்திருக்கிறாய் பார்த்தாயா பேதைப்பெண்ணே....? என்று நையாண்டி செய்தபடி உள்வீட்டின் நாலாபுறச் சுவர்களிலும் ஆட்சியிலமர்ந்திருந்தன.கொடுந்தீயின்மேல் நிற்பதுபோல் அவள் தனக்குள்ளே வெந்துகொண்டாள்.

மூன்று பெண்குழந்தைக்குத் தந்தையான சுமதியின் அண்ணன் தேவகுமார்.எந்தப்பாவவுமே அறியாத அந்த அப்பாவித் தந்தையை வேறேதோ இயக்கத்திற்கு"சப்போட்டராக" இருந்தாரெனக் குற்றஞ்சாட்டி ஏற்றிச்செல்வதற்காக எல்வ் ட்றக் நிறைந்த ஆயுதமனிதர்கள் அவரது வீட்டிற்கு ஒருநாள் வந்தனர். "அப்பா...அப்பா" என்று மூன்று குழந்தைகளும் கதறுவதையும் பொருட்படுத் தாமல் தெருவிற்கு இழுத்து வந்த

னர்.அவரதுமனைவி அவர்கள் ஒவ்வொருவரின் கால்களிலும் வீழ்ந்துகெஞ்சியும் அவர்கள் தேவகுமாரை விடுவதாயில்லை.அண்ணன்வீட டுப்பக்கம் குரல்கேட்டு ஓடிவந்த சுமதி பரிதாபமான இக்காட்சியைக் கண்டதும் இடிவிழுந்தவள்போலானாள். ஓடிச்சென்று அவர்கள் ஒவ்வொருவராய் கெஞ்சிக்கதறினாள்."ஐயோ...எங்கட அண்ணன் விடுங்கோ அவருக்கு ஒன்றும்தெரியாது. உங்களை கும்பிட்டுக்கேட்கிறன் அவர விடுங்கோ........"எவ்வளவு கதறிக்கூத்தாடியும் அவர்கள் இரங்குவதாய் இல்லை.வீட்டுவளவுக்குள்ளிருந்து ஒழுங்கைக்குள் நின்ற வாகனம் வரை தேவகுமாரை இழுத்துக்கொண்டு வந்துவிட்டார்கள்."வையடா அந்தப் பு....ஆண்டிக்கு வெடி" வாகனத்திற்குள்ளிருந்து வெளியே குதித்த தடித்த ஆயுதமனிதன் தேவகுமாரை இழுத்துவந்தவர்களுக்கு க் கட்டளையிட்டான்.அந்தக்கட்டளைக்காகத்தான் காத்திருந்தவர் போல் தாம் இழுத்துவந்த தேவகுமாரை வேலியோடு தள்ளிச் சாய்த்துவிட்டு,சரமாரியாய் சுட்டனர்.ஒருவர் பாக்கியின்றி தத்தமது பங்கிற்கு எல்லோருமே தத்தமது கைகளிலிருந்த ஈழத்தை மீட்கும் கருவிகளால் (?) தனியொருவனை சல்லடையாய் சிதற அடித்தனர்.

கண்ணிமைக்கும் கணப்பொழுதில் ஒருமனிதனின் வரலாற்றை தேசத்தின் வரலாறு விழுங்கி ஏப்பம் விட்டது.இதனால் ஒரு குடும்பத்தின் வரலாறே கேள்விக்குறியானது.இந்தக் கொடிய அனர்த்தத்தினால் சுமதியும் நன்றாகவே பாதிக்கப்பட்டுவிட்டாள்."அவர்கள்"மீது அருவருப்புத்தனமான தோர் வெறுப்புத்தான் வளர்ந்து வந்தது.

குசினிக்குள்ளிருந்து இரண்டு கோப்பைகளில் தேனீர் கொண்டுவந்தான் பரந்தாமன்.சோபாவில் அமர்ந்திருந்த சுமதியிடம் ஒரு தேனீர்க் கோப்பையை நீட்டியபடி"இந்த ரீயக் குடிச்சுப்போட்டு நீர் குளிச்சிற்று ரெஸ்ட் எடும் பிறகு ஆறுதலாகக் கதைப்பம்" என்றான்.

சுமதியினுள்ளத்தினுள் குமுறிக்கொண்டிருந்த கேள்விகள் மடைதிறந்து வெளிவந்தன."என்......இவங்களின்ர படங்கள்,......கலண்டருகள் வீட்டுக்குள்ள தொ

சஞ்சீவி

ங்கவிட்டிருக்கிறியள்...........? ஒருவிதவெறுப்பும்,கோபமுமாய் முதற்கேள்வி வெளிவந்தது. இங்க மட்டுமில்ல சுமி,என்ர பெட்றூமுக்குள்ள போய்ப்பாரும் என்ர தலைமாட்டில தலைவற்ற பெரிய படமொண்டிருக்குது."சிரித்தபடியே தனது பெருந்தன்மையான பக்திப்பரவசத்தை கூறிய பெருமையோடு எதிரேயிருந்த சோபாவில் அமர்ந்துகொண்டான் பரந்தாமன்."எங்கெங்க நீங்க படங்கள் வச்சிருக்கிறீங்களெண்டு நான் கேக்கேல்ல...... ஏன் வைச்சிருக்கிறீங்களெண்டுதான் கேட்கிறன்.கொஞ்சம் ஆவேசம் தெரிந்தது அவளது குரலில்."என்னசுமி ......விசயம் தெரியாதமாதிரிக் கேடகிறீர்,இங்க ஆறு வருசமாக நான் அமைப்புவேலை செய்யிறனெண்டது உமக்குத் தெரியாதே....?இல்ல எனக்குத் தெரியா......."

"தெரியாவிட்டால் இப்ப தெரிஞ்சுகொள்ளுமன்"

"இருந்தாலும் நீங்கள் ரெலிபோனில் எவ்வளவோ வேறவேற விசயங்களெல்லாம் கதைச்சனீங்கள்.அப்பவே நீங்க இங்க இவங்களோட வேலைசெய்யிறதையும் சொல்லியிருக்கலாம்தானே" அதுக்கிப்ப என்ன வந்தது நான் அமைப்புக்கு வேலைசெய்யிறனெண்டால் நீரும் அதற்க்கு ஒத்துளைக்கத்தானே வேணும்...."

"இல்ல .....கடசிவர இல்ல.. இவங்கள் கொலைகாரர். என்ர அப்பாவி அண்ணன சுட்டுத்திண்டவங்கள்.."

அவளது வார்த்தைகளோடு போட்டி போட்டுக்கொண்டு கண்ணீரும் களத்திலிறங்கியது.சுமதியின் வார்த்தைகள் பரந்தாமனை சுட்டன.இத்தனைகாலம் தான் விசுவாசித்துவரும் தனது அமைப்பை "கொலைகாரர்" என்று இவள் கூறுவதை ஜீரணிக்க முடியாதிருந்தது."உன்ர அண்ணர் குற்றம் செய்யாமல் அமைப்பு கடசிவரை தண்டனை விதிச்சிருக்காது."

"என்ன குற்றம் செய்தவெரண்டு விசாரணை நடத்தி பகிரங்கமா நிரூபிச்சிருக்கலாந்தானே".

"அது கட்டாயம் நடந்திருக்கும்.நூறுவீதம் நிருபிச்சப்பிறகுதான் தண்டனை குடுத்திருப்பினம்.""அப்பிடியெண்டால் தாங்கள்தானெண்டு "கிளைம்"பண்ணியிருக்கலாம்தானே....?

சஞ்சீவி

www.tamilarangam.net

"எங்கடஅமைப்பு செய்திருந்தால் அதை கட்டாயம் கிளைம் பண்ணியிருப்பினம். கிளைம் பண்ணயில்ல எண்டபடியால் இது எங்களச் சாட்டி வேறயாரோதான் செய்திருக்கினம்."

"இவ்வளவுதான் உங்கட அமைப்பைப்பற்றி உங்களுக்குத் தெரிஞ்சது.என்ர அண்ணன் மட்டுமல்ல இப்பிடிஎத்தினையோ உரிமைகோராத படுகொலையள் நடக்குது...."

அவள் பேசிமுடிப்பதற்குள், போதும் நிப்பாடடும் .இனிமேல் என்ர அமைப்பை பற்றி ஏதும் கதைச்சால் நடக்கிறது வேற...."என்று அதட்டியபடி எழுந்தான் பரந்தாமன்.

"எல்லாம் ஒரே குட்டயில ஊறின மட்டையள்தானே.ஒண்டு மட்டும் எப்பிடி விதிவிலக்காக இருக்கும்......சுமதி.

"என்ன முணுமுணுக்கிறீர்...? தேவையில்லாத கதை கதைக்கவேண்டாமெண்டெல்லோ சொன்னனான்.இனிமேல் ஏதாவது கதைச்சீரெண்டால் வந்தவழியால் திரும்பப்போவீர்"

"அதைத்தான் நானும் விரும்பிறன் .இன்னும் 12நாள் விசா இருக்குது முடியிறதுக்கிடையில் அனுப்பிவைச்சால் சரி."

"உம்மை இங்க கூப்பிட்ட காசை வைச்சுப்போட்டு போனால்ச் சரி".

"நீங்க என்னை இங்கு கூப்பிடுறதுக்குச் செலவளிச்ச காசைப்போல பத்துமடங்கு உங்கட வீட்டுக்காரரிடம் சீதனக்காசாய் குடுத்தாச்சு ........."

"போதும் நிப்பாட்டடி கதய.. பல்லுக்கில்லெல்லாம் உடைச்சுப் போடுவன் தெரியுமா?"

கதை அத்தோடு நின்றது. ஆனால் நெருப்பிற் தகிக்கும் தாயகத்தை நோக்கிய அவளது பயணம் நின்றுவிடப்போவதில்லை. தொடரும் .தாயகத்தை நோக்கிய அவளது பயணம் தொடரும்.

முற்றும்•

சஞ்சீவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கல்லூரி நண்பனுக்கு....

-செல்வன்-

நண்பா,
எங்கள்கல்லூரிநாட்களும்,
கவலையே
அற்ற அந்த வாழக்கையும்
கை தவறி
போய்விட்டது,
எங்கள்தொடர்புகளைப்போல....

கல்லூரிக் காலங்களில்
எதற்கெல்லாம்
நாங்கள் சந்தோசப்படுவோம்?
ஆங்கில
ஆசி ரியை வராமல்விட்டால்,
விடுமுறை
ஏதும் வந்துவிட்டால்.....

சென்றலில்
இரண்டாம் காட்சி
பாாத்துவிட்டு

www.tamilarangam.net

"சிறீஸ் கபே"இல்
சிற்றுண்டியுடன்தேனீர் அருந்துவது,

பள்ளிக்கு மட்டம் அடித்துவிட்டு
வட்டப்பாறைக்கு
நீந்தப்போவது,

கல்லூரிக்காலங்களில்
கடற்கரை ஓரங்களில்
நாங்கள்
கண்களால் நடாத்திய
காதற் திருச்சபைகள்,

கண்ணடித்த காரணத்தால்
கன்னியர்கள்
தந்து சென்ற
அந்த கனமான சொல்லடிகள்,

இந்த
இனிமைகள் எல்லாம்
வெறும் நினைவானது.
நாம்
நடந்து வந்த பாதை
வெறும் கனவானது.
கவலைகளே
எமக்கு இப்போ பொதுவானது.

இந்த
மனம் மட்டும்
அடிக்கடி
அழுது அடம்பிடிக்கும்,
மீண்டும் ஒரு தடவை
கல்லூரி வளவுக்குள்
போகவேண்டும் என்று...
நண்பா,
காலத்தின் நகர்வில்
கை தவறிப் போனது,
இனிய
நண்பர்களின் தொடர்புகள்
மட்டும் அல்ல,
எம் குதூகலங்களும்
குறும்புகளும்தான்......

தற்செயலாக
ஏற்படும் இந்த "அறிமுகங்கள்"
தாமாகவே
பாசம்வைக்கும்இந்த"இதயங்கள்"
தவிர்க்க முடியாது
குறுக்கிடும் இநத "பிரிவுகள்"
இதனால்,
தற்காலிகம் ஆகிவிடுமா,
எம் உறவுகள்?

சஞ்சீவி

www.tamilarangam.net

# சிவந்த தேனீரால்...

காவோலை சொருகி
அம்மா அடுப்பு மூட்டு றாள்
பக்கத்திருந்து நான்
தேனீர் குடிக்கிறேன்.

விடியாத இரவுகளாய் புகை
பனம் மட்டைத்தட்டி தாண்டும்
மட்டத்தேழும் கரப்பானும்
ஓடித்திரிந்து
நெருப்பினுள்ளேயே போகும்.

பக்கத்திருந்து நான்
தேனீர் குடிக்கிறேன்.

ஒருநாள்
கொக்காரை மட்டை வைச்சு
அம்மா அடுப்புமூட்ட
நான் காவலிருக்கிறேன்
தேனீருக்காய்.

மட்டத்தேழும் கரப்பானும்
ஓடித்திரியவில்லை
அவற்றைக்காணவில்லை
எனக்கு தேனீர் வேணும்.

முகட்டை பார்க்கிறேன்
எலியின் வால்போலொன்று தெரியுது.

எரிகின்ற
கொக்காரைக்குள்ளிருந்து.....
அம்மா பாம்பென்றா......
நானோடினேன்
காணவில்லை நான் பாம்பை
உடல்நடுங்கி
நான் மயங்கி(க்)
கண்விழிக்கிறேன்.

விடியாத இரவுகளாய் புகை
பனம் மட்டைத்தட்டி தாண்டிக்கொண்டேயிருக்க
என் மயக்கம்.....
விசம் தீண்டியதாக(ச்)
செய்தி.

12.09.1992.

சி.லோகநாதன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மொழியை கட்டியெழுப்பும் பங்கு என்பது குழந்தையை முற்று முழுதாக ஊக்குவிப்பதாகும்

*வேதா. இலங்காதிலகம்*

ஒருகுழந்தையை பெற்றுவிட்டால் மட்டும் போதாது.அதை நன்கு வளர்த்து ஒரு திறமையுள்ள பிள்ளையாக நாம் உருவாக்க வேண்டும்.சிலர் திட்டமிட்டு குழந்தையப்பெறுகின்றனர்.சிலர் சந்திக்கின்றனர் கூடுகின்றனர்,குழந்தை உருவாகின்றது. முன்பு பழகாத தெரியாத ஒரு ஆணும் பெண்ணும் சேரும்போது முதலில் தங்களை நன்கு புரிந்து -உணர்ந்து கொண்டு,பின்பு தங்களுக்கு ஒரு குழந்தை வேண்டும் என்று பெறுவார்களேயானால் அது அவர்கட்கும்,குழந்தைக்கும் ஆரோக்கியமானதாகும். அப்படி குழந்தை வேண்டுமென்ற ஆரோக்கியமான எண்ணத்தில் பிறக்கும் குழந்தையை எப்படி நாம் கவனித்து உருவாக்கவேணடும்என்று பலர் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பலவழிகளில் எழுதியபடியே உள்ளனர்.அவற்றில்' இங்கு நான் கற்றுஅறிந்த ஒரு சிறு பகுதியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணுகின்றேன்.

ஒரு குழந்தையின் மொழித்திறமை அதன் வ ர்ச்சிக்கு முக்கியகாரணமாகும்.அதன் பாடசாலை வாழ்வு எப்படி அமையும் ,அது தன் வாழ்வை பின்னால் எப்படிஅமைக்கும் என்பதெல்லாம் இந்த மொழித்திறமையி லேயே அடங்குகின்றது.

குழந்தையின் மொழியை கட்டி எழுப்பவோ பயிற்றுவிக்கவோ நாம் நினைத்தால் ,ஒன்றை நாம் திடமாக புரிந்துகொள்ளவேண்டும்.மொழிவளர்ச்சி என்பது அதன் பிறப்பில்,கருவிலேயே உருவாகின்றது.என்பதை,இதற்கு உதாரணமாக நான் ஓர் சிறுசம்பவத்தை இங்கு கூற விரும்பு கின்றேன்.இது குழந்தையின் பிறப்பில் கருவிலேயே மொழி வளர்ச்சி உருவாகின்றது என்பதை முன்னரேயே புரிந்துகொண்ட ஓர் இளம் தம்பதியினரைப்பற்றியது.(ஆபி ரிக்கப்பெண்ணும் ஓர் டனிஸ் ஆணும்)ஒருநாள் கிறிஸ்தவ மதத்தைச்சோந்த அந்தப்பெண் என்னைக்கேட்டார்"உமது குழந்தை வயிற்றில் இருக்கும்போது உமது கணவரின்குர லை க் குழந்தைகேட்டு குழந்தை அசைந்ததை நீர் அனுபவித்தீரா?என்று.எனக்கு நினைவில்லையே,தெரியவி ல்லையே என்றேன் நான்.அவர் கூறினார் .....".எனது கணவர் ஒவ்வொருநாளும் பைபிளை சத்தமாக எனது வயிற்றினருகில்(கேட்கக்கூடியதாக)வாசிப்பார்.இப்போது (7-8 மாதமிருக்கும்)எனது கணவரின் குரலைக்கேட்கும் போது வயிற்றில் குழந்தையின் அசைவை நான் உணர்கிறேன்".என்றார்.மேலும் கூறினார் தனது கணவர் சில சமயம் மேடையில் பிரசங்கம் செய்யும்போது வயிற்றில் மிகவும் அசைவு தெரிவதாக.இந்த சம்பவம் ,அந்தக்குழந்தையை மிகவும் அறிவுள்ள குழந்தையாக பெற விரும்பும் அவர்களது ஆர்வத்தை ,ஊக்குவிப்பை நமக்கு தெரிவிக்கின்றது. இதையே நான் இக்கட்டுரையின் முன் பந்தியில் திட்டமிட்டு பெறும் குழந்தைஎன குறிப்பிட்டது.

சஞ்சீவி 

www.tamilarangam.net

பிறப்பில் கருவிலேயே தீர்மானிக்கப்படுகின்ற இந்தமொழி வளர்ச்சியின் பங்கு பிள்ளையின் காலம்முழுவதும்,வாழ்வில் அத்தனை முன்னேற்றத்திலும் பின்னி பிணைந்து வருகின்றது. அதனால்தான் இந்தமொழியை கட்டி எழுப்பும் பங்கை முடிந்தவரை மிகநேரத்தோடு நாங்கள் ஆரம்பிக்கவேண்டும்.

**குழந்தையின் மனஎழுச்சி முன்னேற்றம்(வளர்ச்சி) மொழியுடன் சம்பந்தமுடையது.**

உதாரணமாக ஒரு மாதக்குழந்தையை அல்லது கண்விழித்து பார்க்கத்தொடங்கும் குழந்தையை ஒரு தாய் கையிலெடுத்து கண்களோடு கண்களை நோக்கி (Blikkontakt)பரிவுடன் "என்னடா" என்னகுஞ்சு பார்க்கிறீங்க? இது பிள்ளையின்அம்மாவோ? யாரை பார்க்கிறீங்க....."என்றெல்லாம் குழைவாள்.இங்கு முதலில் பிள்ளை கண்களால் அன்பை உணர்ந்து காதால் ஒலியைக்கேட்கின்றது.பின்னும் தாய் விரலால் கன்னங்களை நீவியபடி இதே செல்லக்கதை. சிறிது சிறிதாக பிள்ளை வளர வளர கால்களை,கைகளை அசைத்து இதழ்களைவிரித்து தனது மகிழ்வை,உணர்ச்சியை பிரதிபலிக்கத் தொடங்கும். அதன் முன்னேற்றம் இங்கு மொழியுடன் இரண்டறக்கலக்கின்றது.பின்பு பிள்ளை,தாயின் கூட்டுறவு வளர்ந்து ,பிள்ளைக்கு தாயுடனும் பிறருடனும் தனது உணர்வைப் பகிர்ந்துகொள்ளும் ஆசை பிறக்கிறது. அது பல ஒலிச்சிதறல்களாக வளர்ந்து .....தாய் சொல்வதை திருப்பிக்கூறும் அளவுக்கு வளர்கின்றது.அதாவது பிறர் கூறுவதைக்கேட்டு அதேபோல தானும் கூற ,செயய விழைகின்றது.(Ejterligner).அதாவது இங்கு குழந்தையின் மனஎழுச்சி வளர்ந்து முன்னேறி மொழிபிறக்க,மொழிவளர அடிப்படைக்காரணமாக அமைகின்றது.ஒரு குழந்தை தன்பாட்டில் படுக்கையில் படுத்து சிரித்தபடியே விளையாடுகிறது.அதை ஏன் இப்போது நாம் கெடுக்கவேண்டும்,அழும்போது தூக்கினால் போதும் என்றுநினைத்தால் அது தவறு.நேரம் கிடைக்கும்போதெல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லாம் நாம் அதனை தொடுவதிலும் (Berøring)மனஎழுச்சி வழியாக (Følelsesmæssige) ஊக்குவித்தல் அல்லது தூண்டுவிப்பதும் அதன் பின்னைய வளர்ச்சிக்கு மிகமிக முக்கியம் என்பதை நாம் எப்போதும் மனதில் கொள்ளவேண்டும்.பிள்ளையின் மொழி உச்சரிப்பில் பிழைகண்டு ஒரு ஆசிரியர் (Tale pædagog) அதன் மொழியை சரிவர கட்டிஎழுப்பவேண்டுமாகில்,இந்த மனஎழுச்சிவழி -உணர்வுவழி தூண்டுதல் முன்பு சரிவர அமையாவிடில், அக்குழந்தையின் மொழிவளர்ச்சியில் முன்னேற்றம் காண முடியாது.இங்கு முன்னர் குழந்தை நன்கு சிரித்ததா?(Smiler) விழிவழிதொடர்பு நன்கு சரிவர அமைந்ததா? (Blikkontakt) மனஎழுச்சி உணர்வு வழி தொடர்பு (Følelsesmæssig) நன்கு அமைந்ததா? என்ற கேள்விகளை ஆசிரியர் (Tale/Hørepædagog) எழுப்புவார்,குழந்தை எப்படி வளர்ந்ததென்று அறிய.இங்கு நான் குறிப்பிடுவது 0-7 வயது குழந்தைகளையே.மனஎழுச்-சி (உணர்வு)சக்தியை இதுவரை பாாத்தோம்.

**இயக்கசக்திவளர்ச்சியும்(முன்னேற்றமும்)மொழியுடன் மிக தொடர்புடையது(Motoriske Udvikling)**

குழந்தையின் இயங்கு சக்தியும் மொழிவளர்ச்சியும் சரிசமமாக நடக்கின்றது.பிள்ளையின் இயக்கசக்தி குறையும்போது மொழிவளர்ச்சி குறைகின்றது. மொழிவளர்ச்சி குறையும்போது இயக்கசக்தி குறைகின்றது. உடலை ஆட்டி அசைத்தல்மூலம் (Gennem Bevægelser) குழந்தைதனது இயற்கையான அனுபவ உலகத்தினுள்ளே நுழைகின்றது.இந்த தொழிற்பாடுகள் மூலம் கிட்டிய உலகத்தில் குழந்தை தன்னை நுழைத்து தனது வளர்ச்சியை முன்னேற்றுகின்றது.குழந்தைக்கு நான் எனும் உணர்வைத் தருவதற்கும்,தன்னை சுற்றியுள்ள உலகத்தைப்புரிவதற்கும் உடம்புதான் திடமான ஆரம்பமாக அமைகின்றது.குழந்தை பெறும் அனுபவங்களின் கோர்வையும் -அதன் விளையாட்டுக்கள் - தான் மற்றவர்களுடன் சேர்ந்து இயங்கி தொழிற்படும் அனுபவங்கள் மூலம் ,மொழி கட்டி எழுப்பப்படுகின்றது.பொருட்கள் தனக்கு கிட்டவருவதையு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ம்-அது அசையும் விதத்திலும் -அதை தொடும்விதத்திலும் -பொருட்களின் பெயர்களை நாம் கூறும்போதும் அது நிறைய ப்படிக்கின்றது.

மொழி>

சிறு குழந்தை உடலை -கை கால்களை ஆட்டி அசையும்போது பெரியவர்களின் தொடர்பு மிக முக்கியதேவையாகும்.

.இந்த பெரியவர்களின் (Den voksne Kommunikation) தொடர்பு-உதவி கிட்டாத பிள்ளைக்கு மொழிவளர்ச்சி மந்தமடைகின்றது.இங்கு அசைவுகளின்மூலம் பெறும் அனுபவம்(Bevægelsesmæssigeerfaringer)பொருள்(Genstand)நிலைமை(Situationer)அல்லது சூழல்களின் தொடர்பான சொற்களின் கருத்துக்கள் -விளக்கங்கள் பெறப்படாததால் குழந்தையின் மொழிவளர்ச்சி பாதிக்கப்படுகின்றது.உதாரணமாக -உட்காரமுடிந்த ஒருகுழந்தை ஒரு பொருளை எறிகின்றது.அது உருண்டு தூரப்போகின்றது.நாம் எடுத்துக் கொடுக்கிறோம் அது உற்சாகமடைந்து மறுபடி எறிகிறது.திரும்பவும் எடுத்துக்கொடுக்கிறோம்.நாம் கொடுக்காவிடில் தரும்படி கையை ஆட்டுகின்றது.அல்லது ஒலி எழுப்புகின்றது.இப்போது நாம் பிள்ளையுடன் கதைக்கிறோம்.பிள்ளைக்கு பந்து வேண்டுமா?எடுத்துத்தரவேண்டுமா?இன்னும் பல.இங்கு பிள்ளை "பந்து" "எடுப்பது" போன்ற பதங்களை கேட்கின்றது.ஒரு பெரியவரின் உதவி கிட்டாவிடில் இந்த மொழி-பொருள் - சூழல் அனுபவம் பிள்ளைக்கு கிடைக்காது.இந்த குறைபாடு பிள்ளையின் மொழிவளர்ச்சியையும் -பிள்ளையின் எதிர்கால சகல முன்னேற்றங்களையும் மிக நுணுக்கமாக பாதிக்கும்.ஆகவே நாம் நிறைய அனுபவங்களை இப்படியாக கொடுக்கவேண்டும்.குழந்தைக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சமுதாயத்துடன் கூடிவாழும் -தொடர்புகொள்ளும் வளர்ச்சி / முன்னேற்றம்(Den Sociale Udvikling) மொழிவளர்ச்சியிலேயே தங்கியுள்ளது**

புற உலகத்துடன் தொடர்பு கொள்ளும் விருப்பமும் திறமையும் மொழிவளர்ச்சியிலேயே தங்கியுள்ளது.இதுவும் பெற்றோருடையநடவடிக்கையிலேயேதங்கியுள்ளது.அதாவது அவர்கள் பிள்ளைகளுடன் வாய்மொழியாகவும் செயல் முறையாகவும் நல்ல முறையில் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்.பெற்றோர்களே அதிகநேரம் பிள்ளைகளுடன் பழகுபவர்கள்.பேச தொடங்காத பிள்ளைகளுடன் கண்களால் தொடர்புகொண்டு (øjen Kontakt)உடலால் அல்லது சைகையால்,சாடையால் அவர்களது சமிக்ஜைகளை அடையாளம் காணுபவர்கள் இவர்களே.இவர்களே பிள்ளைகளின் மனதை திறந்து சமூகத்துடன் வாழ-பழக நம்பிக்கையை கொடுப்பவர்கள்.

பெற்றோருடைய இந்த நடவடிக்கை மிகமிகக்கருத்துடையது.பிள்ளை பாடசாலையில் பிறருடன் கூடிப்பழகுவதற்கு மிக தேவையானது.அதுமட்டுமல்ல பிள்ளை மற்ற யாவருடனும் மனம்திறந்து பழகுவற்குகூட இந்த பெற்றோருடைய ஆதரவான நடவடிக்கையே உதவும்."மற்றவர்களுடன் சேர்ந்து வாழ நம்பிக்கை " என்பது பிறருக்கு பயப்படாமல் அவர்களை அனுசரித்து நம்பிக்கையாக சமமாக ஏற்றுக்கொண்டு பழகுவதேயாகும். சமூகத்துடன் சேர்ந்து பழக-மற்றவர்களை கவர ,மிக கெட்டித்தனம் தேவை என்பதல்ல.நிதானத்துடன் மற்றவர்களை ஏற்றுக்கொள்ளவும் பகிர்ந்து கொள்ளவும் தெரிந்தால் போதும்.மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளவும் - எம்மை பிரதிபலிக்கவும் தெரிந்தால் போதுமானதே.

சஞ்சீவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆகவே நமது இளம் தலைமுறையினர் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்து -திட்டமிட்டு தமது குழந்தை களைப் பெற்றெடுத்து திறமையாக வளர்த்து நாட்டிற்கு நல்ல பிரஜைகளாக ஆக்குவார்கள் என்று நம்புகின்றேன்.அர்கட்கு இக்கட்டுரை சிறு தெளிவையாவது கொடுக்கும் என்று எதிர்பார்க்கின்றேன்.

---

## படித்ததும் கேட்டதும்

தேசியம்பற்றி நிறையவே இன்று வெளிநாட்டுச்சஞ்சிகைகளில் எழுதப்படுவதும் ,விவாதிக்கப்படுவதும் ஒருபுறமிருக்க காலனியத்துக்கு பிந்திய அல்ஜீரியாவைப்பற்றி புகழ்பெற்ற ஆபிரிக்க புரட்சி எழுத்தாளரான "பிரான்ஸ் பானான்" புரட்சிக்குப்பிந்திய அல்ஜீரியாவைப் பற்றி பேச வரும்போது இப்படி குறிப்பிடுகின்றார்.

அனைத்து மக்களினதும் உள்ளார்ந்த நம்பிக்கைகளின் வெளிப்பாடாக அமையவேண்டிய தேசிய உணர்வு ஒரு வெற்றுக்குடுவையாகவே உள்ளது."எனக்குறிப்பிட்டார். தேசியம் என்பது தீவிர தேசியமாகவும்,தேசிய வெறியாகவும் இறுதியில் இனவெறியாகவும் மாறியது எனக் குறிப்பிட்ட **அவர்** "தேசியம் என்பது நம்மை ஒரு குருட்டுச்சந்திக்கே இட்டுச்செல்லும்" என்றார். பொன்னான எதிர்காலத்தை கூட்டாகக் கட்டி அமைப்பதற்கு பதிலாக கடும் ஒடுக்குமுறையும் ,வறுமையும் இனக்குழு வாதத்தின் புத்துயிர்ப்பு ஆகியவையே காலனிக்குப்பிந்திய ஆபிரிக்க வரலாறாக இருந்தது என்றும் அவர் குறிப்பீட்டார்.

(நீநப்பிரிகை-Quoted in Ronaldo mu nck,the difficuk diologve,oup 1986 pp.110,111)

சஞ்சீவி

www.tamilarangam.net

# சதுரங்கம்

நானூறு ஆண்டுகால அடிமைத் தழும்பு
நாற்பது ஆண்டுக்குள் எப்படி மறையும்
அதனிடையே
கைகளில் இருந்த விலங்கினைக் கழற்றி
கால்களில் அல்லவா போட்டுக்கொண்டோம்

இருப்புக்களை காப்பாற்ற வேண்டி-அவ்வப்போது
பொறுப்புக்களைவோட்டுக்களிடம்,வேட்டுக்களிடமும்
கொடுத்ததாலோ என்னவோ
இருக்கைகள் பதுங்கு குழிகளாயின

யாருக்காக இந்த குருஷேத்திரம்?
யார் தலையில் யார் சூழ்காச்சி
எப்பேய்க்கு எவர் கலிங்கப்பரணி பாடுவார்??

பாண்டவரின் துச்சாதன அம்புகளுக்கு -அன்றே
அரசியில் சாயம்பூசி ஆதிக்காமல்
அநீதியை அறைந்தே கொன்றிருந்தால்-ஆகியிராது
அரசியலுக்கு இந்தக் கேவலம்

ஆமோதிப்பதற்கு அதிக கைகள் இருந்தால்
எவையுமே சட்டங்களாகலாம்!
எவர்க்கும் எவரும் வீரவணக்கம் செலுத்தலாம்!!
அன்றில்
எவையுமே தெரியாதது போல மௌனிக்கலாம்!!!

சஞ்சீவி

www.tamilarangam.net

கறுத்தக் கோட்டு அரசியலும்
பச்சைச் சூட்டுச் சித்தாந்தங்களும்
மக்களுக்கு புரியாது போனதாலோ என்னவோ
மக்கள் இல்லாத
மக்கள் போராட்டமும் பிரகடனப்படுத்தப்பட்டது.

மக்கள் போராட
மக்களுள் ஓர் தலைவன் கருத்தரிக்க வேண்டும்!
அன்றில்
தலைவனாய் அவதாரம் எடுத்தவன்
மக்களுள் மக்களாக வேண்டும்.

ஆனால் நடந்தது என்ன?

A-Z வரிசையில் எண்ணிலடங்கா மீட்பர்கள்
தெருத் தெருவாய் பிண்டங்கள்
போர்க்கால பிரகடனங்கள்
நாளையும் ஓர் மீட்பர் அவதாரம் எடுக்கலாம்
அவரையும் துதிபாட எம் வாய்கள் அசைக்கப்படலாம்

வெற்றிபெற்றவனுக்கு பின்னால்
வெண்சாமரை வீசி ,வெண்பாக்கள்
பாடிய எம் துப்புக் கெட்ட கவிகள்
இங்கு துப்பாக்கிகளுக்கும் துதிபாடின.

இவைதான் நாளைய

சஞ்சீவி

www.tamilarangam.net

13ம் திருமுறைகள்

சரித்திரத்தின் கல்வெட்டுக்கள்

ஆழுக்கொரு பிள்ளையை தத்தெடுத்து
அழகு பார்க்க அதன் கையில் துப்பாக்கிகளையல்லவா
கொடுத்தோம்

உன் கொள்ளிக்கட்டையால்
உன் தலையை சொறிந்துகொண்டது போதும்

நாளையவிடிவுகளிலாவது......................

வெள்ளைப்புறாவை வானத்தில் பறக்கவிடும்
வல்லூறுகளின் ஆட்சி மாற்றப்பட வேண்டும்
சமாதானத்தூதையும் சதிநடவடிக்கைகளையும் -ஒன்றாய்
நகர்த்தும் சதுரங்கப்பலகைகள் சங்காரம்
செய்யப்படவேண்டும்
மனிதநேயம் மீட்கப்படவேண்டும்
மந்திகள் கொப்பிழக்கவேண்டும்
உன் தொப்பூழ் கொடியில் இருந்து விழும்
அடுத்த ஜீவன் ஆவது ஓர் சுதந்திரப்பூமியில் வீழவேண்டும்
அஃதின்றி
உன் பன்னீர்க் குடத்தை இன்றே உடைத்துவிடு.
இவையாவும்
கண் கெட்ட பின்பான சூரிய நமஸ்காரங்கள் தான்!
ஆனால்
குருடனின் தடியும் ஓர் நாள் குறிபார்த்து அடிக்கும்!!

சஞ்சீவி

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப்போட்டி

## இல :18

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 மா | 2 | 3 | 4 | | 6 | 7 | 8 தை |
| 9 | 10 | | 12 நா | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 ளி | | 21 | 22 | 23 | 24 |
| | 26 மொ | 27 | | 29 | 30 | | |
| 33 | | 35 | | 37 | 38 | 39 ம | |
| 41 | 42 | 43 வ | | 45 | 46 | 47 | 48 |
| 49 | 50 | | 52 | | 54 | 55 | 56 |
| 57 அ | 58 | 59 | 60 | | | 63 | 64 |

சஞ்சீவியின் குறுக்கெழுத்து போட்டியாளர்களுக்கு!

குறுக்கெழுத்துப்போட்டி மூலம் ஓர் பலமான-விளக்கமான கருத்தினை உங்களுக்கு தரமுடியாதிருந்தும் பல வாசகர்களினது விருப்பங்களினாலும் சஞ்சீவியின் 2வது கலந்துரையாடலின்போது எடுக்கபபட்ட முடிவுகளின் மூலமாகவும் கு.எ.போட்டிவெளிவருகின்றது

பதில்கள் கிடைக்வேண்டிய இறுதித்திகதி:20.12 1992

குறுக்கெழுத்துப்போட்டியின் பரிசில்களாக கவிதைத்தொகுப்பு,சிறுவர்களுக்கான நூல்கள்,பிறசஞ்சிகை இதழ்களில் ஒன்று என்ற வகையில் போட்டியில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இட- வலம்

| இல. | கேள்விகள்: |
|---|---|
| 1. | மனிதம் இதனை இப்படியும் அழைப்பர். |
| 6 | இது"சமநிலை"இன் ஒத்தசொல்லாகும். |
| 12 | பழையன கழிந்து புதியன புகுதலை இப்படிக் கூறுகின்றனர். |
| 17 | எமது தாயகத்தில் பல மக்கள் பிச்சையெடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டதால்இந்தப்பையினையும் கொண்டு செல்லலாம். |
| 21 | நிலம்எல்லையிடப்படுதல்,பிரித்துக்கொடுத்தலுக்கும் இப்படிக் கூறுவர். இது குழம்பியுள்ளது. |
| 37 | மனிதன், தாகம் எடுத்தால் ,துக்கப்பட்டால் இந்தச்சொல்கொண்டு அழைப்பர். |
| 43 | தலைஇழு-த்தலைஇப்படிக்கூறும்போதுஅழகு |
| 57 | நெல் பழுத்து கதிர் படுத்தால் இது நடக்கும். |
| 63 | பனம்பழம் உண்ணும்போது புளி உப்புக் கரைத்து உண்டுபண்ணும் திரவ உணவின் ஒரு பகுதியே இது. |

## மேல் - கீழ்

| இல. | கேள்விகள்: |
|---|---|
| 1 | மாதாந்தவெளியீட்டினை (சஞ்சிகை)இப்படியும் அழைப்பர். |
| 2 | 2 வது உலகமகாயுத்தத்தின்போது நாசிகள் தலைவரான கிட்லருடன் கைகோர்த்து பல இலட்ச மக்களை அழித்த இத்தாலிய நாட்டு சர்வாதிகாரியின் பெயர் இது. |
| 6 | இது ஏழு ஸ்வரங்கள். |
| 7. | ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்பிள்ளைகளை இப்படியும் அழைப்பர். |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

9 தென் அமெரிக்காவில் உள்ள ஒரு நாட்டின் பெயர்.

12 பேசுபவரையும்,கேட்பவரையும் சேர்த்துக் குறிப்பிடும் தன்மை இடத்துப் பன்மைச் சொல் இதுவாகும்.

13 இவர் கபடம் நிறைந்தவர்.

42 எமது தாய்நாட்டின்,கூடுதலானோர் வீடுகளில் நீர் இதனுள் ளிருந்தே எடுக்கப்படும்.

43 இந்தியநாட்டின் பல மொழிகளில் இதுவும் ஒன்று.

48 சந்தை இதனை இப்படிக் கூறுவர்.

52 நீர் பயிருக்குப்பாய இது திறபடவேண்டும்.

57 குண்டுகள் வெடிக்கும்போது,பெரும் சப்தம் கேட்கும்போது இது *புலப்படும்.*

63 இது கதை தழுவிய தொடர்நிலைச் செய்யுள்.

**கு.எ.போட்டி இல-17 பரிசுபெறுவோரும் சரியான விடைகளும்.**

கு.எ.போ.17ல்இருவர்மட்டுமேபரிசில்பெறுகின்றனர்.அவர்களுக்கான பரிசில்களாகஇருவருக்கும்கவிதைத்தொகுப்புஅனுப்பிவைக்கபடுகின்றது .இவர்களுக்கும் ஆர்வத்துடன் போட்டியில்கலந்துகொண்ட மற்றையோருக்கும் எமது நன்றிகள்.

| பரிசுபெறுவோர் | |
|---|---|
| **1.A.Satkunarajah-vamdup** | **2.Mrs.k.Sivasakthy-Farum** |

சரியானவிடைகள் -

இட.வலம்:
1.அகதி
5தஞ்சம்
9.சபரன்
17திடம்
21.புகை
26.தாவரவியல்
33.பரி
36.அயீரணம்
44.சோர்வு
49.வான்
52.முப்படை
59.கையாள்
61.புத்த ம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | 2 க | 3 தி | | 5 த | 6 ஞ் | 7 ச | 8 ம |
| 9 ச | 10 ப | 11 ர | 12 ன் | | | 15 தி | 16 த |
| 17 தி | 18 ட | 19 ம | | 21 பு | 22 கை | | 24 மா |
| | 26 தா | 27 வ | 28 ர | 29 வி | 30 ய | 31 ல் | |
| 33 ப | 34 ரி | | 36 அ | 37 யீ | 38 ர | 39 ண | 40 ம் |
| 41 டை | | | 44 சோ | 45 ர் | 46 வு | | 48 த |
| 49 வா | 50 ன் | | 52 மு | 53 ப் | 54 ப | 55 டை | |
| 57 ள் | 58 யா | 59 கை | | 61 பு | 62 த் | 63 த | 64 ம் |

மேல்-கீழ்:
1.அசதி
2.கபடதாரி
7.சதி
21.புவியீரப்பு
24.மாதம்
33.படைவாள்
48.தம்
63.தடை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# அஞ்சல் நூலகம் பற்றி...

சஞ்சீவி "அஞ்சல் நூலகம்" என்ற உப வெளியீடு ஒன்றினை வெளியிட்டிருந்தது சில வாசகர்கள் அறிந்ததே.இந்த வெளியீடு பற்றிய நோக்கங்கள் அந்தமலரில் தெளிவாக எழுதப்பட்டிருந்தாலும் அதன் நோக்கம் பற்றி மேலும்....

இன்று இலங்கை, இந்தியா. ஐரோப்பியாபோன்ற நாடுகளில் வெளி வரும் தமிழ்ப்பத்திரிகைகள் பெரும்பாலோருக்கு கிடைப்பதில் லை.அப்படிக்கிடைக்கப்பெற்றாலும் முழுமையாகப் படிக்க நேரம் கிடைப்பதில்லை .அதன் பிரகாரம் எமக்கு கிடைக்கும் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் தரமான சில ஆக்கங்களை தெரிவுசெய்து தொகுத்து மலராக வெளியிடுவது தான் இந்த அஞ்சல் நூலகமாகும்.

சஞ்சீவி

இந்தவெளியீட்டை ஒருவர் படித்து முடித்தவுடன் அடுத்த வாசகருக்கு அஞ்சல்மூலம் அனுப்பிவைப்பதுதான் இதன் முறையாகஇருந்தது. ஆனால் இந்நூலை சில வாசகர்கள் சொந்தமாகப் பெற்றுக்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.


மேலும் இதை பெற்றுக்கொள்ளவிரும்புபவர்களும் , இது சம்பந்தமான வேறு விடையங்களுக்கும் சஞ்சீவியோடு தொடர்பு கொள்ளவும்.

-சஞ்சீவி-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காதல் மலர்களைக் கூட..

க. ஆதவன்

மனித எத்தனம்
மலிந்துபோயிற்று.

எனது தேசம்
எரிந்து போயிற்று.

அண்டம்வரை விரிந்த
மனிதமூளையுள் -
இயந்திர துவக்கு.
பிண்டங்களாய்...பிணந்தின்னிக் கழுகுகளாய்
உயிர்ப் பூச்சியைக் கொல்லும்
உலுத்தர்களாய்....
வேட்டையாடி....வேட்டையாடி........

மனித எத்தனம்
மலிந்து போயிற்று.

இனி என்ன எனக்கு?
மிச்சம் இருக்கும்
என் காதல் மலர்களைக்கூட
கொன்றாகி விட்டாச்சு.

துப்பாக்கிகளைப் புதைப்போம்
மண்ணினுள் மட்டுமல்ல.
எங்காவது புதைக்கலாம்.
மூளையினுள்ளும் புதைக்கலாம்.

13.04.1992


www.tamilarangam.net

# கம்யூனிசத்திற்கு சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டதா...?

தங்கநேசன்

- 18வது இதழின் தொடர்ச்சி -

டென்மார்க் ஆக்கிரமிக்கப்பட்ட பின் நாஜிகளுக்கு எதிரானவர்கள் ஒன்று திரண்டு போராட்டங்களை மேற்கொண்டனர். இப் போராட்டங்கள் மிகவும் ரகசியமாகவும், உறுதியாகவும் வழிநடத்தப்பட்டன. இதில் டென்மார்க் கம்யூனிஸ்ட்டுகள் பாரிய பங்காற்றினார்கள். ஆனால் ஆளும் வர்க்க அமைச்சர்களும், செல்வந்தர்களும் நாஜிகளுடன் உறவு கொண்டு 'நட்பை' வளர்த்தனர். போர் முடிந்து டென்மார்க் விடுதலை அடைந்த பின் பல டெனிஸ் நாஜிகள் தேசதுரோகிகள் என பழிவாங்கப்பட்டனர்.



'டெனிஸ் அரசு உயர் அதிகாரிகள் - அரச அங்கத்தவர்கள் நாஜிகளுடன் கூடிக் குலாவிய காட்சி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1941 ஜீன் 22ம் திகதி எவ்வித முன்னறிவிப்புமின்றி ஜேர்மன் படை சோவியத் யூனியனைத் தாக்கியது. இத்தாக்குதல் மிகவும் பயங்க-ரமாக நடைபெற்று அதன் விளைவுகள் சோவியத் யூனியனை மிகவும் பின்னடைய வைத்தது. படையெடுப்பு நடந்த சில மணிகளில் சோவியத் யூனியனின் வெளிநாட்டமைச்சர் வானொலியில் போர் அறிவிப்புச் செய்தார். அவரது குரல் இப்படி ஒலித்தது.

" போர்ப் பிரகடனம் செய்யாமல் ஜேர்மன் துருப்புக்கள் நமது நாட்டைத் தாக்கியுள்ளது. முன்பின் கேட்டறியாத இந்தத் தாக்குதல் நாகரீக தேசங்கள் கண்டிராத நயவஞ்சகமான செயலாகும். நமது இலட்சியம் உன்னதமானது. பகைவன் அடியோடு நிர்மூலமாக்கப்படுவான். நிச்சயம் வெற்றி நமதே !"

படையெடுப்பு நடந்த மறுநாள் புதிதாக பதவிக்கு வந்த பிரிட்டிஷ் அரசு தனது ஆதரவை சோவியத் யூனியனுக்குத் தெரிவித்தது.

படையெடுப்பு நடைபெற்று பதினொரு நாட்களின் பின்னர் தலைவர் ஸ்டாலின் பேசினார். அவர் சொன்னார். "பகைவன் கணிசமான பிரதேசத்தை கைப்பற்றிக் கொண்டு விட்டான். எனி-னும் இதனால் கிலியடைய வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் வெல்லற்கரிய சைனியங்கள் என்று எவையும் கிடையாது. அப்படிப்பட்ட சைனியங்கள் இருக்கவும் முடியாது. திடீர் தாக்குதல் காரணமாக ஜேர்மனி (நாஜிகள்) முக்கியமான ராணுவ அனுகூல-த்தைப் பெற்றுள்ளது. ஆனால் இரத்த வெறிபிடித்த ஆக்கிரமிப்பா-ளன் என்பதை காட்டிக் கொண்டதன் விளைவாக அரசியல் ரீதியில் அது தோல்வியடைந்து விட்டது. இந்த யுத்தத்தை மக்கள் அனைவரினதும் யுத்தமாக மாற்றுவதே ஜேர்மனியின் போர்த்தந்திரத்திற்கு மாறான சோவி-யத் யூனியனின் போர்த்தந்திரமாக இருக்க வேண்டும். நமது சைனியம் சோவியத் மண்ணின் ஒவ்வொரு அங்குலத்திற்காகவும் போராட வேண்டும். பின் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் மதிப்பு மிக்கவை யாவும் அப்புறப்படுத்தப்பட வேண்டும், அல்லது அழிக்கப்படவேண்டும். ஐரோப்பிய மக்களிலும், அமெரிக்கமக்களிலும் சோவியத்யூனியனுக்கு விசுவாசமான கூட்டாளிகள் ஏராளமானோர் இருக்கிறார்கள். நமது நாட்டின் சுதந்திர-த்திற்காக நாம் நடாத்தும் யுத்தம், ஜனநாயக சுதந்திரங்களுக்காக ஐரோப்பிய மக்களும், அமெரிக்க மக்களும் நடாத்தும் போராட்டத்துடன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின்னிப்பிணையும். பகைவனை எதிர்த்து உக்கிரமாகப் போராடவே தொடலிலாமல் வெற்றி நோக்கி முன்னேறும் படியும் அனைவரையும் அறை கூவி அழைக்கிறேன்!"

"மனம் குழம்பி நின்ற மக்களிடையே இந்தச் சொற்பொழிவு மகத்தான பிரதிபலிப்பை ஏற்படுத்திற்று" என்று வரலாற்று ஆசிரியர்கள் எழுதினர். சோவியத் வரலாற்று ஆசிரியர் அலெக்சாந்தர் வெர்த் பின்வருமாறு எழுதினார். "செந்நீரையும், கண்ணீரையும் சிந்த வைக்கும் உணர்ச்சிகரமான சொற்பொழிவாகும். அது யானை பலமளிக்கக் கூடிய, தன்னம்பிக்கையூட்டும் மகத்தான சொற்பொழிவு என்றும், ரஷ்ய மக்களின் தேசிய பெருமிதத்தையும், தேசபக்த உணர்வையும் அவர் தட்டி எழுப்பினார்."

படையெடுப்பு நடந்த 3 வாரங்களுக்குள் ஜேர்மன் படை 450 மைல்கள் முன்னேறின. மாஸ்கோவுக்கு இன்னும் 200 மைல்கள் தான் இருந்தன. இதனையிட்டு நாஜிகள் ரொம்பவும் பெருமையடித்துக் கொண்டார்கள். "சோவியத் யூனியனுக்கு எதிரான படையெடுப்பு இரண்டே வாரத்தில் முடிந்து விட்டது என்று கூறினால் அது மிகையேதுமல்ல." என்றும் 'சோவியத் யூனியனின் கதை கிட்டத்தட்ட முடிந்து விட்டது! என்றும் நாஜிகள் ஊளையிட்டனர். இவற்றிற்கு சிகரம் வைத்தது போல் கிட்லர் தனது பேராசையை வெளிக்காட்டினான். "நாம் பலமாகக் கதவை எட்டி உதைக்க வேண்டியது தான், உடனே மக்கி இற்றுப் போன அந்தக் கட்டிடமே சட சட வென்று சரிந்து, விழுந்து, பொடிப் பொடியாகி விடும்." என்று. கம்யூனிசத்தின் பரம எதிரியான பிரிட்டிஷ் பிரதமர் வின்சன் சேர்ச்சில் "ரஷ்ய ராணுவம் விரைவில் தோற்கடிக்கப்பட்டு விடும் என்றே கிட்டத்தட்ட பொறுப்பு வாய்ந்த எல்லா ராணுவ அதிகாரிகளும் அபிப்பிராயப்பட்டனர், என்றும் குறைந்த பட்சம் ஒரு மாதமும் அதிகபட்சம் மூன்று மாதங்கள் நீடிக்கும்" என்று எழுதினார்.

ஆனால் சோவியத் மக்கள் காட்டிய நெஞ்சுரம் எல்லோரையும் திகைக்க வைத்தது. 'போலந்திலும், பிரான்ஸிலும் நடைபெற்றது போல் எதுவும் சோவியத் யூனியனில் நடைபெறவில்லை. மின்னல் வேகப் போர் முறை அமோக வெற்றி வருவது போல் வெளிப்பார்வைக்குத் தோன்றினாலும் ரஷ்யப் போர் முனைக்குள்ளேயோ, பின்னணியிலோ எத்தகைய பீதியும் காணப்படாதது ஆச்சரியமான விசயமாகும்' என பிரிட்டிஷ் ராணுவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிபுணரான ஃபுல்லர் சுட்டிக்காட்டினார்.' மிகவும் திடவுறுதி படைத்த, அபாயகரமான எதிரியை ஜேர்மனியர்கள் எதிர் நோக்க வேண்டியதேற்பட்டு விட்டது. படைவீரர்களிலும், டாங்குகளிலும், விமானங்களிலும் ஜேர்மனியின் இழப்புக்கள் மிகமிக அதிகம்.' என சுவீடன் பத்திரிகை எழுதியது. "ரஷ்யர்களின் பலத்தை பொருளாதாரத்துறையிலும், போக்குவரத்துத் துறையிலும் மட்டுமின்றி, முக்கியமாக ராணுவத்துறையிலும் நாங்கள் குறைத்து மதிப்பிட்டு விட்டோம் என்பது நாளுக்கு நாள் தெளிவாகிறது. ஆரம்பத்தில் ரஷ்யர்களிடம் சுமார் 200 டிவிசன்கள் இருக்கும் என்று கணக்குப் போட்டோம். ஆனால் இதற்குள்ளாகவே 360 டிவிசன் வரை எண்ணி விட்டோம். இவற்றில் ஒரு டஜன் டிவிசன்கள் அழிக்கப்பட்டால் உடனே ரஷ்யர்கள் இன்னொரு டஜன் டிவிசன்களை எங்கிருந்தோ கொண்டுவந்து விடுகின்றனர்" என்று ஹாட்லர் தனது டயரியில் எழுதினான்.

மாஸ்கோவுக்கான போரில் மாஸ்கோவை ஜேர்மன் ராணுவம் கைப்பற்றிவிடும் என்று ஹிட்லர் கனவு கண்டு கீழ் கண்டவாறு உளறி-னான்.

"மாஸ்கோ நகரம் சுற்றி வளைத்துக் கொள்ளப்பட வேண்டும். எந்த ரஷ்யப் படை வீரனோ, சிவிலியனோ, ஆணோ, பெண்ணோ, குழந்தையோ நகரை விட்டு வெளியேறக் கூடாது. அப்படி வெளியேறச் செய்யப்படும் எல்லா முயற்சிகளும் வன்முறை மூலம் முறியடிக்கப்பட வேண்டும். ராட்சத பம்புகளை நிறுவி அவற்றின் உதவியால் மாஸ்கோவையும், அதன் சுற்றுப் புறங்களையும் வெள்ளக்காடாக்க வேண்டும். மாஸ்கோ இப்போதுள்ள இடத்தில் ஒரு பரந்த கடலை உருவாக்கி, நாகரீக உலகின் பார்வையிலிருந்து ரஷ்ய மக்களின் தலைநகரை என்றென்றைக்குமாக மறைத்து விட வேண்டும்."

இது ஒரு மனித குல விரோதியின் பேச்சு என்பதை யாவரும் உணர்ந்து கொள்ளலாம். பாசிஸ்டுக்களின் தலைவன் வேறு எப்படிப் பேசுவான்? ஆனால் உண்மையில் போர் நிலமைகள் ஹிட்லரின் ஆசைக்கு எதிர்மாறாக இருந்தது. சோவியத் மக்கள் அஞ்சா நெஞ்சுடன் போராடி ஹிட்லரின் கனவைத் தவிடு-பொடியாக்கினர். வார்த்தையால் வர்ணிக்க முடியாத அளவு துயரங்களையும், இழப்புக்களையும் தாங்கிக் கொண்டு உருக்கு உறுதியுடன் போராடி பாசிசம் எனும் கொடிய மிருகத்தை அதன் குகைக்கே விரட்டியழித்து உலக மக்களை நாஜிகளினதும், பாசிஸ்டுகளினதும் பிடியிலிருந்து காத்தது. மனித வரலாறு கண்டறியாத இப்போரில் ரஷ்ய ராணுவமே (செஞ்சேனை) போரின் பெருஞ்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுமையை ஏற்றது. 1945ம் ஆண்டு மேமாதம் 1ம் திகதி பாட்டாளிவர்க்கத்தின் நாளன்று நாஜிகளின் அரசகட்டிடத்தில் பாட்டாளிவர்க்கக் கொடி பறக்கவிடப்பட்டது. கம்யூனிசத்தின் பரம எதிரியான வின்சன் சர்ச்சில் ரஷ்ய வெற்றியை கீழ்கண்டவாறு விவரித்தார்.

"அங்கே ரஷ்ய பீரங்கிகளின் காது செவிடுபடும் முழக்கத்துடனேயே ஹிட்லருக்கு ஈமத்தீ மூட்டப்பட்டது; மூன்றாவது ரீச்சுக்கு (நாஜிகளின் அரசு) சமாதிகட்டப்பட்டது."



பாசிசம், நாஜிசம் முடிவுக்கு வந்த நாள். பாட்டாளிவர்க்க வர்க்கக்கொடி நாஜிகளின் அரசகட்டிடத்தில் பறக்கவிடப்படும் காட்சி.

நாஜிகள் ஆரம்பித்துவைத்த இந்த யுத்தத்தால் உலகில் 5 கோடி மக்கள் உயிர் பலியானது. இதில் 2 கோடி மக்கள் சோவியத்யூனியனைச் சேர்ந்தவர்கள். (இது இலங்கைமக்கள்தொகையைவிட அதிகமானது.) நாஜிகளின் வீழ்ச்சியால், அடிமைப்பட்டுக்கிடந்த பல நாடுகள் விடுதலையடைந்தன. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோசலிச ஆட்சிகள் நிறுவப்பட்டன. பாசிஸ்டுகளுக்கு எதிரான போரில் சமரசமின்றி, உறுதியாக கம்யூனிஸ்டுகள் போராடியதால் அதற்கான ஆதரவு கம்யூனிஸ்டுகளுக்குக் கிட்டியது. ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலும் விடுதலைக்கான போராட்டங்கள் கிளர்ந்தெழுந்தன. போரில் ஏகாதிபத்தியங்கள் சிக்கியதாலும், உலக நிலைமை காரணமாகவும் காலனி ஆட்சிகள் நீடிப்பது கடினமாயிற்று. பலநாடுகளுக்குப் பேரளவிலான (போலி) சுதந்திரம் வழங்கப்பட்டது. சீனா, வட கொரியா போன்ற நாடுகளில் கம்யூனிஸ்டுகள் நீண்ட காலப் போராட்டத்தின் பின் ஆட்சியைக் கைப்பற்றினர். **தொடரும்**

ச ஞ ச் வா

www.tamilarangam.net

# பிறக்கட்டும் புதிய ஆதாமும் ஏவாளும்

சாதிகள் தான் வாழணும் என்றால்
நமக்குச் சந்ததிகள் வேண்டாமடா.
எம்மோடு அழியட்டும்
சாதியின் சாம்ராஜ்யம்
எமக்காய் பிறக்கட்டும்
இன்னொரு ஆதாமும் ஏவாளும்.
புனிதமடா இந்த மானிடப்பிறப்பு.
புறக்கணித்தல் பாவமடா மனிதனை மனிதன்.
கூடிவாழ கூவிடடா குயிலென
கூடிவரட்டும் இழந்த நம் உறவுகள்.
கோவிலிற் கூட இந்தச் சாதியின் சட்டங்கள்
உடையட்டும் இந்த உள்ளங்களின் அஸ்த்திவாரங்கள்.
ஏனடா உனக்கு இந்த இழிவான எண்ணங்கள்.
வேரோடு சாய்த்திடு இந்த விசமான மரத்தை
பின்னாவது விடியட்டும் புதியதொரு யுகத்தில்.

ஆனந்தி
"லுனஸ்கோ"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடிதங்கள்

**1.மலர் 20 பற்றி-**

காத்திரமான விடையங்களை தாங்கி சஞ்சீவி வெளிவந்த போதிலும் அமைப்புவடிவத்தில் ஓர்பஞ்சாங்கம்போன்றிருந்தது. கவனத்தில் கொள்வது நன்று. முதல் 4,5ம் இதழ்களில் இக்குறை இருந்தது.எழுத்து வடிவம் மாறியது வரவேற்கத்தக்கது எனினும் அமைப்பில் கவனம் கட்டாயம் தேவை என்பது மீரா என்ற ஓர் வாசகனின் எதிர்பார்ப்பு.

மீரா.
சஞ்சீவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## 2. தமிழீழ விடுதலைப்போராட்டதகில் புலிகளின் பங்கு

தமிழீழ விடுதலை போராட்டமானது தமிழ்மக்கள் தம்மை தயார்படுத்த முன்னரேயேதமிழ்மக்களைதழுவிக்கொண்ட ஒன்றாகும்.உண்மையில் ஆரம்பகாலத்தில் இது ஒரு கட்டாய கல்யாணமாகவே தமிழ்மக்களின் உணர்வில் இருந்தது. 1983ம் ஆண்டு யாழப்பாண பல்கலைக்கழக சந்தியில் 13 இராணுவவீரரை பலிகொண்டதன் பின்னர்தான் இது தமிழ்மக்களை கவர்ச்சி கொள்ளச்செய்தது. 13 இராணுவம் பலி,அதுவும் சிங்கள இராணுவம் என நாம் மிக மகிழ்ச்சிகொண்ட காலமது.நாம் அதன்பின்பு புலிகள் மிக பிரபல்யமடைந்த கதை வாசகர்களுக்கு புரியும். ஏனைய இயக்கங்களின் வளர்ச்சியும் உங்களுக்கு தெரியும்.தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் புலிகள் செய்த தியாகங்கள் எவராலும் மறுக்கப்படக்கூடியவை அல்ல.அதனால்தான் மக்கள் இவ்வளவு காலமும் இத்தனை சோதனைகளையும் தாங்கிக்கொண்டிருக்கின்றார்கள்.உண்மையில் தமிழீழ போராட்டத்தில்மற்றய இயக்கங்கள் விட்ட தவறுகள் தான் புலிகளை ஒரு ஜனநாயக தோற்றம் கொண்ட சர்வாதிகார போக்கு ஒன்றுக்கு இட்டுச்சென்றது.ஒவ்வொரு இயக்கமும் தம்மை ஒரு போராட்ட நிலைமைக்கு தயார்ப்படுத்தாமல் வெறுமனேயே ஒவ்வொரு அலுவலகங்களை ஊருக்குஊர் திறந்து வைத்ததன்விளைவுதான் ,அவர்கள் உறங்கிக்கொண்டிருக்கும்போதுபுலிகள் சஞ்சீவி

நூல் அறிமுகம்
இருப்பு
தொடர்புகளுக்கு:
BM BOX 4002
LONDON WC IN 3XX
U.K.

www.tamilarangam.net

அவர்களை படுக்கையில் வைத்தே தடை செய்ய உதவியது.எனவே இந்த தவறுகள் தான் புலிகளை மக்கள்பால் ஈர்க்கச் செய்தது.ஏனைய இயக்கங்களை தடைசெய்தபோது மக்கள் தட்டிக்கேட்காமல் இருந்தார்கள்.புலிகளை பாராட்டினார்கள்.உண்மையில் நான்கூட மிக மகிழ்சி அடைந்தேன்.நான் நம்மை வழிநடத்தஒழுங்கான ஒரு இயக்கம் போதும் .அது புலிகள்தான் என்றிருந்த காலம்.பின்பு புலிகள் கிராமிய ரீதியான கொள்ளைகளை தடுத்தார்கள் கொள்ளையடித்தவர்கள் புலிகளின் பெயரைச் சொல்லிவிட்டு போனார்கள்.சில கொள்ளைகளை புலிகள்தான் என்று மக்களே சொன்னார்கள்.புலிகள் சமன் மக்கள் , மக்கள் சமன் புலிகள் என்ற காலம். அப்பொழுது சரியான தகவல்களை பெற முடியவில்லை.

தியாகங்கள் ஒருபுறம்.மக்களின் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படும் கட்டங்கள் மறுபுறம் .பல்கலைக்கழக மட்டத்தில் மாணவர்கள் கொலைகள்,கடத்தல்கள் பயறுத்தல்கள் .புலிகள் மாணவசக்தியினை புறக்கணித்தார்கள்.பல்கலைக்கழகம் தமது கட்டளைகளை அமுல்படுத்தும் களமாக இருக்கவேண்டுமென எதிர்பார்த்தார்கள்.தேசியவிடுதலை போராட்டத்தில் பல்கலைக்கழகம் அதுவும் தமிழ்ப்பிரதேசத்திலுள்ள யாழப்பாண பல்கலைக்கழகம் பங்குபற்றாமல் இருக்கக்கூடாது என்று எதிர்பார்த்தார்கள்.அது நியாயமானதும் கூட.அதற்காக அவர்களை அணுகிய முறைகளில் தவறு விட்டார்கள்.கருத்துமுரண்பாடுகளுக்காக மாணவர்கள்,விரிவுரையாளர்களை கூட



சஞ்சீவி

www.tamilarangam.net

கொலைசெய்ய தயங்கவில்லை. தமது மக்களுக்கு சுதந்திரத்தை வழங்காமல் சிங்கள அரசாங்கத்திடமிருந்து தாம் சுதந்திரத்தை எதிர்பார்த்தார்கள்.விளைவு இந்திய-இலங்கை ஒப்பந்தம்.இந்திய அரசும் புலிகளுடன் முரண்பட்டன.புலிகள் தமிழ்துரோக கும்பல்களுக்கு மாகாண சபை ஏற்பட வழிவிட்டார்கள்.இதன்மூலம் சொந்த மக்களையே அடையாள அட்டை கேட்டு அடித்து துன்புறுத்தியது அந்த துரோகக் கும்பல்.புலிகள் -இலங்கை தேனிலவு உறவு ஆரம்பமானது. இந்திய இராணுவம் வெளியேறியது.c.v.f அல்லது 3star என அழைக்கப்பட்ட சிப்பாய்கள் செய்வதறியாது தடுமாறினர்.

அடிமட்டத்திலிருந்து வந்த இரண்டு தலைவர்கள்(பிரபாகரனும்,பிரேமதாசாவும்) எப்படியும பிரச்சனையை தீர்ப்பார்கள் என மக்கள் அங்கலாய்த்தாகள்.இலண்டன் புலிகளிடம் எப்படி தலைவர் -பிரேமா பேச்சுவார்த்தை சரிவருமா என்று கேட்ட பொழுது wait and see என்றனர்.முடிவுகளை மக்கள் இரண்டு வருடமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.தமிழ்மக்கள் இந்த போராட்டம் பற்றி என்ன நினைக்கிறார்கள்,என்று கருத்து ஒன்று அறியப்பட வேண்டிய காலம் வந்துவிட்டது.மக்களின் அவலம் தீர்க்கப்படவேணடும் என்று பிரேமதாசாவும் அறிக்கை விடுவதில் காலத்தை கழிக்காமல் நிஜத்துக்கு வரவேண்டும்.மக்களின் வேதனையில் அக்கறையுள்ளமற்றய இயக்கங்களும் பகைமையை மறந்து ஒரு தீர்வுக்கு அரசை வற்புறுத்த

சஞ்சீவி

மேலதிகவிபரங்களுக்கு..

சஞ்சீவியின் புதிய விலாசம்:

CHANCHIVE
Danmarksgade 10
7500-HOLSTEBRO,
DANMARK.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டும்எந்த அரசின் வாகனத்திலாவது ஏறி சவாரி செய்தால் அதுவேபோதும் என்ற அற்ப ஆசையினை விட்டு மக்களுக்கு ஏதாவது செய்ய வேணடுமென முனையவேணடும்.புலிகளை தமிழீழ விடுதலை போராட்டத்தில் தோற்கடிக்க வேண்டும் என்ற எண்ணததைவிடுத்து புலிகளை ஜனநாயக பாதையில் கொண்டு வந்து திருத்த நாம் முனையவேண்டும். அப்பொழுதுதான் எமது நண்பர்களின் தியாகங்களுக்கு அர்த்தம் இருக்கும்.தமிழ் மக்களின் விடுதலையிலும் அர்த்தம் இருக்கும் .

நன்றி!

செல்வா-சின்னத்தம்பி
இலண்டன்

---

மேற்கண்ட கடிதம் தொடர்பாக வாசகர்களிடமிருந்து கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றது.

- சஞ்சீவி -

---

## நூல் அறிமுகம்

# புதியகலாச்சாரம்

தொடர்புகளுக்கு
ஆர். சீனிவாசன்
45, செங்குன்றம்சாலை
வில்லிவாக்கம்
சென்னை - 600049.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழத்திலிருந்து ஓர் துண்டுப்பிரசுரம்

# சேந்தன் எங்கே?



கொலை வெறி பிடித்த பாஸி லக் கரங்களுக்குள் மக்களை நேசித்த இன்னுமோர் மனிதன்.

ஆம்!

பொறியியலாளர் சேந்தன் புலிகளால் கைது!

யார் இவர்?

சஞ்சீவி

வீண் ஆடம்பரங்களைக் கொண்டு தம்மை அறிமுகம் செய்யும் அற்பமான மனிதர்கள் வாழும் இந்த உலகில் எந்தவித வீணான ஆடம்பரங்களுமின்றி அடக்கமாக வாழ்ந்த ஓர் அற்புதப் பிறவி!

மனித நேயமே மலடாகிப்போன எமது மண்ணில் மக்களை மனதார நேசித்த ஓர் மனித ஜீவன்.

மண்மீட்பு என்ற பேரில் மறைந்து போன காட்டுமிராண்டித்தனங்களையெல்லாம் மீட்டெடுத்து மக்களை அழிக்கும் அரசியல் நிலவுகின்ற எமது மண்ணை உண்மையாக நேசித்த ஓர் உன்னதப் பிறவி. விடுதலை, போராட்டம் என்ற பேரில் கோடிகோடியாக மக்களிடம் கொள்ளையிட்டு தாம் மட்டும் சுகபோக வாழ்க்கையை அனுபவித்தபடி மக்களுக்கு கொலையையும், சித்திரவதைகளையும் மட்டுமே வழங்கும் வெறியர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாழும் மண்ணில் தனது உழைப்பு முழுவதையுமே தன் சக ஊழியர்களுடன் சமனாகப் பங்கிட்டு தானும் ஒரு சாதாரண தொழிலாளியாகவே வாழ்க்கை நடத்திய ஓர் அதிசய மனிதன்.

ஆம் மொத்தத்தில் இவர் ஓர் உண்மை மனிதன்.

தமிழ் மண்ணில் குறிப்பாக வடக்கில் சீவல் தொழில் மூலம் கள்ளு இறக்குவதையே தம் ஒரே வருமானமாகக் கொண்ட பல்லாயிரக் கணக்கான குடும்பங்களின் நல்வாழ்விற்கு ஓர் மறைமுக ஆதார சக்தியாக திரு சேந்தன் அவர்கள் விளங்கினார் என்பது பலரும் அறியாத உண்மையாகும்.

எப்போதுமே வேற்றுநாட்டு தொழில்நுட்ப இயந்திரங்களை உபயோகித்துப் பழகிப்போன எமது மக்களுக்கு தனது சொந்த அறிவையும், திறமையையும் பயன்படுத்தி எமது மண்ணின் மூலவளத்தையே பொன்னாக்கும் தொழில் நுட்பத்தை அறிமுகம் செய்தவர் திரு சேந்தன். திக்கம், வரணி, புதுக்குடியிருப்பு போன்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ள உள்ளூர் பனஞ்சாராய வடிசாலை இயந்திரங்கள் இவரின் சொந்த வடிவமைப்புகளே! அவை இன்றுவரை வெற்றிகரமாக இயங்குவதற்கும் இன்னும் பல இயந்திரங்களை வடிவமைப்பதற்கும் ஒய்வு ஒழிச்சலின்றி தன் சக ஊழியர்களுடன் கடுமையாக உழைத்தவர் திரு சேந்தன்.

இந்த வடிசாலைகளை வெற்றிகரமாக தாங்களே நடத்துவதாகக் காட்டிக்கொள்ளும் புலிகள் இதிலிருந்து மட்டும் வருடத்திற்கு 20 கோடி ரூபாக்களை இலாபமாகக் கொள்ளையிட்டுச் செல்கின்றனர் என்பது பலரும் அறியாத மிகக் கசப்பான உண்மையாகும்.

ஈரான், பிரான்ஸ், கனடா, இந்தியா போன்ற பல நாடுகளில் வேலை செய்த பின்னர் தனது சொந்த மண்ணில் செயற்படுவதே சரியானது என்ற இதயசுத்தியோடு நாடு திரும்பிய இவர் யாழ்ப்பாணத்தில் 'Sky Lark' என்னும் பொறியியற்சாலையை ஆரம்பித்து செயற்பட்டார். தற்போது அது 'Ezlroville' என்னும் பெயரில் இயங்கிவருகிறது.

எப்போதும் எம் சொந்த மண்ணின் மூலவளங்களை வைத்தே தனது திட்டங்களைச் சிந்திக்கும் இவர் தன்னோடு தொழில் செய்த அனைவரையும் கூட அப்படிச் சிந்திப்பதற்குப் பழக்கினார்.

ஆனால் இன்று புலிகளின் பட்டியலில் சேந்தன் ஒரு துரோகி!

எந்தவொரு கட்டத்திலும் தனது தனித்துவத்தையும், மனித மாண்பையும் இழந்துவிடாது கம்பீரத்துடன் சரியைச் சரியெனவும் தவறைத் தவறெனவும் நேருக்கு

சஞ்சீவி

www.tamilarangam.net

நேர் சுட்டிக்காட்டிய நேர்மையுள்ளம் படைத்த இவரை இக் கொடியவர்கள் சந்தேகித்தது ஏன்?

எப்போதுமே தங்களைவிட திறமையுள்ள, தனித்துவமான, ஆளுமையுள்ள எவரைக் கண்டாலும் சந்தேகித்து பீதியுற்று அவர்களை தீர்த்துக்கட்டும் செயற்பாட்டையே தமது கொள்கையாகக் கொண்ட இக் கேடுகெட்ட கொடியவர்களுக்கு திரு சேந்தனும் இன்று இரையாகிவிட்டார்.

தமிழ்ப்புலமை பெற்ற திரு பண்டிதர் வீரகத்தியின் மூத்த புதல்வரான இவர் 3 குழந்தைகளின் தந்தை. தனது கடுமையான உழைப்பினால் உடல்நலம் குன்றியவர். எந்தக் கடுமையான வேலைச் சுமைகளுக்கு மத்தியிலும் தன் குழந்தைகளுடன் சிறிது நேரமாவது மனம்விட்டுப் பேசி மகிழும் ஒரு ஆழமான பாசமுள்ள தந்தை இவர்.

கடந்த சித்திரை மாதம் 14ஆம் திகதி கற்சிலைமடுவில் வைத்து விசாரணைக்காகப் புலிகளால் கைது செய்யப்பட்டார். ஒன்றரை மாதங்களாகியும் விடுவிக்கப்படவோ, எவருக்கும் காட்டப்படவோ இல்லை. இதுவரை அவரை விடுவிப்பது பற்றித் தீர்க்கமாக புலிகளால் எதுவுமே கூறப்படவும் இல்லை. திரு சேந்தன் அவர்களை அறிந்த அவரை நேசித்த நெஞ்சிலே ஈரமுள்ள அனைவரும் ஒன்றுசேர்ந்து உரத்துக் கேட்கிறோம்.

புலிகளே எங்கள் சேந்தன் எங்கே?
உடனே அவரை விடுதலை செய்யுங்கள்.
அவரைப் போன்றே நீங்கள் அடைத்து வைத்திருக்கும் ஆயிரக்கணக்கான மனச்சாட்சியின் கைதிகளையும் விடுதலை செய்யுங்கள்.

*- திரு சேந்தன் அவர்களை அன்போடு நேசிக்கும் நண்பர்கள் (ஈழம்), 01.06.92*

மனச்சாட்சி உள்ளவர்கள் மாத்திரம்
இதற்கு எதிராகக் குரல் கொடுங்கள்!

- சஞ்சீவி -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எழுத்தும் முகங்களும்
## அல்லது
# முகங்களும் சாயங்களும்

- உதிசபாபதி

படைப்புக்கும் படைப்பாளிக்கும் உள்ள உறவு வித்தியாசப்படுத்திப் பார்க்கக்கூடியதல்ல. ஒரு படைப்பாளி தான் கேட்ட, பார்த்த, தரிசித்த உண்மைகளை அனுபவ உணர்வுகளின் ஊடு தனக்குப் பிடித்த உருவங்களின் ஊடாக வெளிக்கொணரும்பொழுது அந்தப்படைப்பு இயல்பாகவே வெற்றி அடைகின்றது.ஒரு படைப்பு பலராலும் பாராட்டிப் பேசப்படுவதால் மட்டும் ,குறிப்பீட்ட படைப்பின் படைப்பாளி இறுமாப்படைவதில் ,புளகாங்கிதம் அடைவதில் அர்த்தம் இல்லை.அந்தப்படைப்பு வாசகர் கூட்டத்தை எந்தளவு தூரத்திற்கு தாக்கத்திற்கு உட்படுத்தியுள்ளது,வாசகர் கூட்டத்தின் சிந்தனைப்பரப்பை எந்தளவு தூரத்திற்கு விரிவுபடுத்தியுள்ளது,எந்தளவு தூரத்திற்கு விமர்சனப்பார்வைக்கு உட்படுத்தியுள்ளது எனப்பலதரப்பு வாதப்பிரதிவாதிகளால்பேசப்படும்பொழுதே - அக் குறிப்பிட்ட படைப்பு அந்தப்படைப்பாளி மகிழ்வடைகின்றான்.

"சமூகஉணர்வுப்பிரக்ஞை" எழுத்தாளர்கள்,சமூக,அரசியல்,கலாச்சார உள்ளடக்கத்தையொட்டிய படைப்பை படைத்துவிடுவதன் மூலம் ,அல்லது சமூகப்பிரக்ஞையுடன் கூடிய ஒரு பிரச்சினையை தொட்டுச்சென்று இனங்காட்டுவதன் மூலமும் குறிப்பிட்ட படைப்பாளியின் கடமை முடிந்துவிடுகின்றதா?

இதுவிடையத்தில் பலவிதமான சாதக பாதகமான கருத்துக்கள் வாசகர்கூட்டத்தின்முன் வைக்கப்படலாம்.ஒருசாரார் "நாம் எழுத்தாளர்கள்.பிரச்சினையை மட்டும் சொல்கிறோம் அதோடுஎமது கடமை முடிந்துவிடுகின்றது.முடிவு என்பது வாசகர்கூட்டத்தை பொறுத்தது" என்று கூறலாம்.

இன்னொருசாரார் "பலராலும் விவாதிக்கப்படுகின்ற ,பேசப்படுகின்ற ஒரு பிரச்சினையை தொட்டு எழுதுவதற்கே துணிவு மிகத்தேவை..அத்தகைய துணிவு நிறைந்த வேலையைஎமது பேனா செய்கின்றது.இதனுடன் இப்பிரச்சினையில் எமதுவேலை முடிகின்றது.தீர்வு கூறுவதற்கு நாம் யார்?என்ற கேள்வியுடன் விவாதக்களத்தில் இறங்கலாம்.

இந்த இரண்டுசாரார் கூற்றை எடுக்கும்போது இருசாரார் கூற்றிலும் "தப்பிதம்"தெரிகின்றதே தவிர வேறில்லை.நமக்கேன் வீண் வம்பு என்கிற மனப்பான்மை எங்களுக்கு எல்லோரும் தேவை என்கின்ற பெருமனம்.!

ஒரு பிரச்சினையைத்தொட்டு எழுதும் எழுத்தாளன், அவன் மனச்சாட்ச்சிப்படி அவன் சுயதீர்வு என்ன என்று தெரியும்பொழுதும் அவன் அதை மறைத்துவிடுகின்றான். தீர்வு கூறுவது வாசகரை குழப்பத்தில் ஆழ்த்தும் "எனக்கூறுவது ஏற்கக்கூடியதொன்றல்ல.குறிப்பிட்ட பிரச்சினையில் ஒரு எழுத்தாளன் முன்வைத்ததீர்வை ஏற்பதும் ஏற்காததும் வாசகனைப்பொறுத்த விடையம். இப்படியிருக்க எமதுதீர்வு வாசகர்கூட்டத்தை குழப்பும் என்கிற வாதத்தில் அர்த்தம் காணமுடியாது.

நான் நினைக்கின்றேன் தீர்வைச்சொல்லாமல் தப்பித்துக்கொள்வது தமது முகங்களை காப்பாற்றிக்கொள்ளவே தவிர வேறில்லை.எங்கே தமது முகங்கள் அடையாளம் காணப்பட்டுவிடுமோ என்கின்ற மனப்பிராந்தி!மனப்பயம்!!

"சமுகம்"என்பது தனிமனிதர்களின் கூட்டம்.தனிமனிதப்பிரச்சினைகள் நாளை சமுகப்பிரச்சினையாகலாம். "தனிமனிதனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்" எனக்கூறினான் பாரதி..

சஞ்சீவி

www.tamilarangam.net

எனவே தனிமனிதனுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள் அல்லது தனிமனிதர்களால் சமூகத்திற்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள் பற்றி பேசுவதிலோ,எழுதுவதிலோ,விவாதிப்பதிலோ,விமர்சனப்பார்வைக்கு உட்படுத்துவதிலேயோ தவறெதுவும் காணமுடியாது.இதனால் பயனுள்ள விவாதிப்புக்கள் எம்முன் எழலாம்.அவை ஆரோக்கியமானவையாகவே கொள்ளப்படும்.இது இப்படியிருக்க எழுத்தாள மகாஜாம்பவான்கள் தம்மை ஏன் மறைத்துக்கொள்ளவேண்டும்? அவசியமே இல்லை.

"நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத்திறமுமின்றி
வஞ்சனை செய்வாரடி-கிளியே!
வாய்ச்சொல்லில் வீரரடி!
கூட்டத்திற் கூடிநின்று கூவிப்பிதற்றலின்றி,
நாட்டத்திற் கொள்ளாரடி!-கிளியே!
நாளில் மறப்பாரடி!"

என்ற பாரதியின் பாடல் .
நாம் நாளும் மனத்தில் இருத்த வேண்டிய பாடல்..

---

நூல் அறிமுகம்

# நிறப்பிரிகை

தொடர்புகளுக்கு:

நிறப்பிரிகை
20.ப.கோதண்டபாணித் தெரு
கும்பகோணம் 612001
இந்தியா.

---

சஞ்சீவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## >>சிறிலங்காவில் டனிஸ் செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதியின் விஜயம்>>

***தமிழர்கள் அமைதியைமட்டுமேபெறவிரும்புகின்றனர்***

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பு தலைவராக பணியாற்றிய அண்மையில் தனது தாய்நாடாகிய டென்மார்க் திரும்பியதும் கொலஸ்ரபுரோ நகரில் உள்ள டென்மார்க்பிகேத வில் இருக்கும் கலாச் சார இல்லத்தில் தமிழர்களின் தாய்நாடான, உலகின் சொர்க்கமாகவும்இருந்திருக்கக்கூடிய இலங்கைபற்றித் தனது கருத்தினை வெளியிட்டார். பல உல்லாசபிரயாண ஒழுங்கு அலுவலகங்கள் மலிவான உல்லாசப்பயண இலக்காக இலங்கையை மீண்டும் தமது உல்லாசபயண நிகழ்ச்சிநிரலில் சேர்த்துள்ளனர்.அதே நேரத்தில்தொடர்ந்துஒன்பது வருடமாக நாட்டினை சிரமத்

www.tamilarangam.net

திற்குள்ளாக்கும் போரினால் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறியவண்ணமுள்ளனர்.

**Turister en fordel (உல்லாசப்பிரயாணிகளுக்கு சாதகமான சூழல்)**

ஒகூஸ் நகர ஆஸ்ப்பத்திரியில்மருத்துவதாதியாக பணியாற்றுபவர். ஆறுமாதங்கள் இலங்கையில் பணியாற்றியுள்ளார்.இறுதி மூன்று மாதங்களும் அவரது மனைவியும் அவருடன் சேர்ந்துகொண்டார்.

அவர்கள் உல்லாசப்பிரயாணிகளாக இலங்கை செல்லும் எவரையும் எச்சரிக்கை செய்யவில்லை.அமைதியின்மை/ பயங்கரவாதம் பொதுவாக நாட்டின் வடபகுதி வடகிழக்கு பகுதிகளில்மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.இதனால் பல டெனிஸ் மக்களும்,ஐரோப்பியர்களும் நாட்டின் பிரச்சனையை மக்களுடன் நேரடியாக கதைத்து அறிந்துகொள்ள ஒரு சாதகமான சூழ்நிலையாக அமையும் என அவர்கள் கருதினர்.

தற்பொழுதுவடபகுதியில் வவுனியாவில் ஒரு "நிரந்தர எல்லை" அமைக்கப்பட்டுள்ளது.அங்கே அரசபடையினரும், புலிகளும் ஒருவரையொருவர் எதிர்த்துநிற்கின்றனர்.இவ்வெல்லையிலிருந்து வடக்காக அரசபடையினர் சிலஇடங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். ஆனால் பெரும்பாலான பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.இருந்தபோதும் அரசாங்கமும்,செஞ்சிலுவைச் சங்கமும் வடபகுதிக்கு உணவுப்பொருட்களை அனுப்புகின்றன.

(மிகுதி அடுத்த இதழில் தொடரும்)

சஞ்சீவி

www.tamilarangam.net

## குறுக்கெழுத்துப்போட்டி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 மா | 2 | 3 | 4 | | 6 | 7 | 8 தை |
| 9 | 10 | | 12 நா | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 ளி | | 21 | 22 | 23 | 24 |
| | 26 மொ | 27 | | 29 | 30 | | |
| 33 | | 35 | | 37 | 38 | 39 ம் | |
| 41 | 42 | 43 வ | | 45 | 46 | 47 | 48 |
| 49 | 50 | | 52 | | 54 | 55 | 56 |
| 57 அ | 58 | 59 | 60 | | | 63 | 64 |

இல 18


உங்கள் பாவனைக்கு:-


அலுவலகப்பாவனைக்கு:-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






சஞ்சீவி

www.tamilarangam.net

# சஞ்சீவி
## ஆறு மலர்களுக்கான சந்தா

| | |
|---|---|
| Switzerland | |
| France | |
| Italy | 25 u$ |
| London | |
| Germany | |
| Canada | |
| Australia | 29 u$ |
| Sweden | 125kr. |
| Norway | |
| Danmark | |

காசோலை எடுக்கவேண்டிய கணக்கிலக்கமும், முகவரியும்.

**A/C.NO.7601-408695-3**
**Tamilsk Dansk Venskabs Forening**
**Vestjysk Bank**
**7500-Holstebro,**
**Danmark.**

காசோலை அனுப்பவேண்டிய முகவரி

**CHANCHIVE**
DANMARKSGADE-10
**7500-HOLSTEBRO,**
**DANMARK.**

"மறுக்கப்பட்டு, பழக்கமற்றுப்போனதொரு சுதந்திரமான
கருத்துப்பரிமாற்றலை உருவாக்குவதற்கு
எல்லோரது கருத்துக்களும்,
விமர்சனங்களுமே
வழிவகுக்கும்."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**Chanchive**
DANMARKSGADE 10
**7500 Holsterbro**
**Denmark.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்